

වාර්ෂික වාර්තාව 2021

කළමනාකරණ පශ්චාත් උපාධි ආයතනය

ශ්‍රී ජයවර්ධනපුර විශ්වවිද්‍යාලය

ஆண்டறிக்கை 2021

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

Annual Report 2021

POSTGRADUATE INSTITUTE OF MANAGEMENT

University of Sri Jayewardenepura

ஆண்டறிக்கை 2021



முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

Postgraduate Institute of Management
University of Sri Jayewardenepura

உள்ளடக்கம்

நோக்கு, பணிக்கூற்று மற்றும் பெறுமானங்கள்	92
பணிப்பாளர் அவர்களின் மீளாய்வு	95
அறிமுகம்	98
முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் - நிறுவனத்தின் கட்டமைப்பு	99
முகாமைத்துவ சபை	100
கற்கைச் சபை	101
கற்பித்தல் நடவடிக்கைகள்	102
ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்	108
பங்காண்மை	114
நிலைபேறான தன்மை	116
நிருவாகம	132
எதிர்கால திட்டங்கள்	141
நிதிசார் கூற்றுகள்	142
கணக்காய்வு அறிக்கை	187
கணக்காய்வு அவதானங்களுக்கான மு.ப.நி பதில்	195

நோக்கு, பணிக்கூற்று மற்றும் பெறுமானங்கள்

நோக்கு

தெற்காசியாவின் முகாமைத்துவ துறையில் கீர்த்தி மிக்க மத்திய நிலையம் ஒன்றாக மாறுதல்

பணிக்கூற்று

சர்வதேச கண்ணோட்டத்துடனும் உள்ளூர் அடித்தளத்துடனும் கூடிய தலைவர்களை விருத்தி செய்வதன் ஊடாக நாம் மனித சிந்தனை சக்தியை தூண்டிவிடுகின்றோம்.

இந்த முயற்சியில் புத்தாக்க கற்பித்தல், மிக முக்கியமான ஆராய்ச்சிகள், பயனுள்ள பங்குடமை, மலர்ச்சியுடன் கூடிய நிலைபேறான தன்மை மற்றும் முன்னுதாரணமான நல்லாட்சி என்பவற்றை நாம் பின்பற்றுகின்றோம்

எமது பெறுமானங்கள்

அவா:- செயற்பாடுகளில் தொழில்வாண்மை காட்டுவதில் விளைவுகளை நோக்கிய உற்சாகமும் ஆர்வமும்

பிரதான நடத்தைசார் அடையாளங்கள் (பி.ந.அ)

1. தொழிலுடன் இணைந்த பணிகள் பற்றிய தெளிவு கொண்டவர்
2. பணிகளை கையாளுவதில் உற்சாகத் தன்மை மிக்கவர்
3. புதிய தீர்வுகளைக் காண்பதில் புத்தாக்க மிக்க சிந்தனை
4. நிறுவனஞ்சார் வெற்றிக்கான ஒருவரது பங்களிப்பு பற்றி உணர்வுள்ளவர்
5. நோக்கங்களை அடைவதற்கு மேலதிக சக்தியை வழங்க ஆர்வமுள்ளவர்.

நேர்மைத்தன்மை:- நிறுவனத்தின் சிறந்த நலனை மனதிற்கொண்டு ஒழுக்கவியல் தன்மையுடன் நடத்தல்

பிரதான நடத்தைசார் அடையாளங்கள் (பி.ந.அ)

1. நடத்தையில் நேர்மைத் தன்மை வாய்ந்தவர்
2. இரகசியமான விடயங்களை கையாள்வதில் நம்பகமானவர்
3. நிறுவனத்தின் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளினுள் பூரணமாக தன்னை நடத்துபவர்
4. ஒழுக்கமற்ற செயற்பாடுகளுக்காக தொழிற்பட மாட்டார்
5. சுய நலனை விட நிறுவனத்தின் தேவை தொடர்பாக முற்படுவார்


சிந்தனை உணர்வு:- விடயங்களை சுய விழிப்புணர்வுடன் செய்வதில் நோக்கத்திற்கும் செயற்பாடுகளுக்கும் கவனம் செலுத்துதல்

பிரதான நடத்தைசார் அடையாளங்கள் (பி.ந.அ)

1. விபரங்களுக்கு கவனம் செலுத்துதல்
2. எந்தவொரு நேரத்திலும் தேவையான செயற்பாடுகள் குறித்து விழிப்புணர்வுடன் இருத்தல்
3. நிலைமைகளைப் பக்கச்சார்பற்று, திறந்த மனதுடன் பார்த்தல்
4. கையிலுள்ள பணிகள் தொடர்பில் பூரண அவதானத்துடன் இருத்தல்
5. நேரத்தை பயன்படுத்துவதில் வினைத்திறனுடன் மேற்கொ

முழுதுமளாவிய அணுகுமுறை

எமது சிறப்புகள்



எமது முன்னேற்றத்தை அறியும் பொறிமுறையொன்றாக (QMS) எமது தர முகாமைத்துவ முறைமையை நாம் பயன்படுத்துகின்றோம்.

இலக்குகள்

அடுத்து ஐந்து வருடங்களுக்கான முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 5 இலக்குகள் பின்வருமாறாகும்.

முதலாவது இலக்கு:- முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களின் நோக்கெல்லையை மேம்படுத்தல்.

இரண்டாவது இலக்கு:- ஆராய்ச்சி மற்றும் வீடுகளில் முகாமைத்துவ பயிற்சி நிலையத்தின் கீர்த்தியின் நோக்கவில்லை மேம்படுத்தல்.

மூன்றாவது இலக்கு:- கைத்தொழில், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்சார் அமைப்புகளுடனான தொடர்பினை மேம்படுத்தல்.

நான்காவது இலக்கு கல்வி நடவடிக்கைகளுக்கு, ஆராய்ச்சிகளுக்கு மற்றும் ஆலோசனைகளுக்கு பெரும்பாலும் உபகாரமாக அமையும் பௌதீக வளங்களை விருத்தி செய்தல்.

ஐந்தாவது இலக்கு:- ஒன்று தொடக்கம் நான்கு வரையிலான இலக்குகளை எய்துக் கொள்வதற்கு முடியுமான வகையில் நிதிசார் மற்றும் நிருவாக வினைத்திறனை மேம்படுத்தல்.

இதன் பிரகாரம் 20 , உபாய முறை நோக்கங்கள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் தரம் தொடர்பான கொள்கை

விழுமியங்களின் அடிப்படையில் தனித்துவமான நிறுவன கலாச்சாரத்துடன் கூடிய அறிவு மற்றும் புத்தாக்கத்தை பின்பற்றுகின்ற இலங்கையின் கீர்த்திமிகு பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PIM) என்ற வகையில், நிருவகமானது கற்பித்தல் ஆராய்ச்சி, உசாவுகை மற்றும் அது தொடர்பான கல்வி போன்ற, அதன் அனைத்து முயற்சிகளிலும் சர்வதேச தராதர கீர்த்தியை பின்பற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு, எல்லா சந்தர்ப்பங்களிலும் ஆராய்ச்சி, மீளாய்வு, மதிப்பீடு மற்றும் தொடர்ச்சியான மேம்பாடு போன்ற செயன்முறைகளின் ஊடாக அதன் முக்கிய அனைத்து ஆதரவு தொழிற்பாடுகளிலும் பொறுப்புக்கூறத்தக்கதாக தொடர்ந்தும் திகழ்கின்றது.

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானது,

- எமது கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களின் தரத்தையும் நோக்கெல்லையையும் மேம்படுத்தல்,
- தர முகாமைத்துவ முறைமையை தொடர்ச்சியாக மேம்படுத்தல்
- அதன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஊடாக உபாயமுறையில் சர்வதேச உறவுகளை மேம்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளில் கீர்த்தியை ஏற்படுத்தல்
- கைத்தொழில்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்சார் அமைப்புகளுடன் கூட்டாண்மையை வளர்த்தல்
- பயிற்சி மற்றும் ஆதரவு வசதிகளை அளிப்பதன் மூலம் திறன் கொண்ட மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்திய பதவியணி மற்றும் பீடங்களை விருத்தி செய்தல்
- நிறுவகத்தின் நிருவாக மற்றும் நிதிசார் செயன்முறைகளினூடாக வினைத்திறனையும், அத்துடன் பயனையும் மேம்படுத்தல்
- ஏற்புடையதாகும் எல்லா நியதிச்சட்ட மற்றும் ஏனைய ஒழுங்குபடுத்தல் தேவைகளை பூர்த்தி செய்தல் மற்றும்
- சமூகத்துடன் அதன் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் கூறொன்றாக கூட்டாண்மை சமூக பொறுப்பை மேம்படுத்தல் என்பவற்றில் அர்ப்பணிப்புடன் செயற்படுதல்.

பணிப்பாளர் அவர்களின் மீளாய்வு



2021 ஆம் ஆண்டில் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் செயலாற்றுகை குறித்து மதிப்பாய்வு செய்வதற்கு கிடைத்தமையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். எமது முழுதுமளாவிய வெற்றியை நான் எனது அர்ப்பணிப்புள்ள பல்பரிமாணமிக்க முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் குழுவுக்கு சமர்ப்பிக்கின்றேன்

நாம் அனைவரும் அறிந்து வைத்திருப்பது போல தலைமைத்துவம் என்பது ஊக்கப்படுத்தி, செல்வாக்கு செலுத்தி முன்னெடுப்பது ஆகும். அது பதவிகள் பட்டங்கள் என்பதைவிட தீர்மானங்களும் நடவடிக்கைகளிலும் சம்பந்தப்பட்டதாகும். சுமார் முப்பத்தைந்து வருடங்களாக நாம் தேசத்துக்கான தலைவர்களை உருவாக்கி வருகின்றோம். இவ்வாறு நன்கு வார்க்கப்பட்ட தொழில் வல்லுனர்கள் நம்பிக்கை, வினைத்திறன் என்பவற்றுடன் பெறுமதி உருவாக்கத்தில் தலை சிறந்து விளங்குகின்றனர். அவர்கள் தனியார் மற்றும் பொதுத் துறைகளில் செயலாற்றுவதற்குத் தேவையான முன்னணி அறிவு, இணைந்த திறன்கள் என்பவற்றை தன்னகத்தே கொண்டுள்ளனர். அவர்களை தெளிந்த அறிவுடனும், அர்ப்பணிப்புடனும் உருவாக்குவதில் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானது, இலங்கைக்கும் வெளியே அதன் சிறகுகளை அகல விரித்து முகாமைத்துவ கல்வியில் என்றுமே கீர்த்திமிக்க நிலையமொன்றாக தலை நிமிர்ந்து நிற்கின்றது.

கீர்த்தி என்பது விதிவிலக்கான முறையில் சிறந்து விளங்குவதாகும். இது தொழில் முயற்சிகளில் பிரயோகிக்கப்படும் போது, அது தொடர்ச்சியாக அமைப்பில் விதிவிலக்கான அடைவுகளுடன் சம்பந்தப்படுகின்றது. இந்த வகையிலேயே முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகமும் அதன் சரியான தரம் மற்றும் அளவு என்பவற்றின் மீது கவனம் செலுத்தி சுய நிதியிட்ட, பகுதியளவு சுயாதீனத் தன்மையுடைய பொது நிறுவனமாக இருப்பதில் பெருமையடைகின்றது. நாம் அதிவிசேட நிறைவேற்றுத் தரத்துடன் உள்ளவர்களுடன் இலகுவாக திறமை காட்டி அவர்களது உண்மையான உள்ளார்ந்த ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு அத்தியாவசியமாக அவர்களுடன் ஈடுபட்டு வருகின்றோம். தேசம் அவர்களிடம் பல்முனைகளிலும் சமூக பொருளாதார மேம்பாட்டை நோக்கி பங்களிப்புச் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கின்றது.

நாட்டில் உள்ள எட்டு பல்கலைக்கழகங்கள் (MBA) பட்டத்தை வழங்கும் அதே வேளையில் பன்னிரெண்டுக்கும் அதிகமான தனியார் – வெளிநாட்டு (MBA) பாடநெறிகள் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்துடன் போட்டி போடுகின்றன. இந்தப் பாடநெறிகள் வெளிநாட்டு நிதியை பயன்படுத்தி வெகுவாக விளம்பரப்படுத்தப்படுவதோடு அவை (MBA) நிகழ்ச்சித் திட்டங்களுக்காக முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் அறவிடுவதைப்போன்று இரு மடங்கு மிகை கட்டணங்களை அறவிடுகின்றன. போட்டித் தன்மையானது நுழைவு தகைமைகளை குறைத்தல் மற்றும் உள்ளூர் பல்கலைக்கழகங்களில் "புகழ்பெற்ற" பெயர்களுடன் கூடிய நபர்களை வளப்பகிர்வாளர்களாக பயன்படுத்துதல் போன்றனவாகும். மேற்படி நிலைமையானது, தனது சுய நிதியத்தில் இயங்குகின்ற நிறுவனமாக பாரிய சவாலை எதிர்கொள்கின்றது. போட்டித் தன்மையைக் கொண்ட தனியார் கல்வி நிறுவனங்கள் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் முகம் கொடுக்கின்ற வரையறைகளுக்கு உட்படுவதில்லை. தன்னிறைவானதாக இருக்க வேண்டும் என்கின்ற அதன் சுய உந்துதலளிக்கப்பட்ட முன்னெடுப்பானது, முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் சம்பளம், பொது பயன்பாடுகள், வழங்கல், போக்குவரத்து தேவைகள், மூலதன செலவினம், வரி மற்றும் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் கணக்காய்வு கட்டணங்கள் போன்றவற்றிற்கான கொடுப்பனவுகளுக்காக நிதிகளை உழைக்க வேண்டியிருக்கின்றது. இது இலங்கையில் ஒரு பொதுத்துறைசார் நிறுவனமொன்று, அதன் நடைமுறை மற்றும் மூலதன செலவினங்கள் அனைத்தையும் உள்ளடக்கி உழைப்பதற்கு துணிந்து நிறுவனத்தை மிகைநிலையுடன் பேணி வருவது உண்மையிலேயே ஒரு தனித்துவமான நிலையாகும்.
இவ்வாண்டில் 2020 -22 தாபனத் திட்டத்தின் அடிப்படையில் முகாமைத்துவ பட்டப்படிப்பு நிறுவகம் அதன் முகாமைத்துவ சபை மற்றும் கல்விச் சபையினால் திறமையாக வழிநடாத்தப்பட்டு நெறிப்படுத்தப்பட்டது. பொதுவாக நோக்கும்போது முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் ஐந்து வகை இலக்குகள் அதாவது, (i.) இலக்கு முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களின் நோக்கெல்லையை

மேம்படுத்தல். (ii) இலக்கு ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளில் முகாமைத்துவ பயிற்சி நிலையத்தின் கீர்த்தியின் நோக்கவில்லை மேம்படுத்தல். (iii) இலக்கு கைத்தொழில், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்சார் அமைப்புகளுடனான தொடர்பினை மேம்படுத்தல். (iv) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அபிவிருத்திச் செய்தல் மற்றும் நன்மை பயக்கும் கற்கை சூழலை வழங்குவதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை சான்றுப்படுத்தல் மற்றும் (v) நிதிசார் மற்றும் நிருவாக இசைவிணக்கங்கள் வெளிநாட்டு வருமானம் அடங்கலாக வருமானம் அதிகரித்தலை சான்றுப்படுத்தல் ஆகிய ஒட்டுமொத்த செயலாற்றுகை மிக திருப்திகரமானதென நான் மகிழ்சிசியுடன் குறிப்பிடுகின்றேன். .இங்கு அடுத்து வரும் பக்கங்கள் இவ்வாண்டுக்கான அடைவுகள் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் மனிதவளங்களின் அபிவிருத்தி, நிருவாகம் மற்றும் நிதி வினைத்திறன் தொடர்பான பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

விவாதத்திற்கிடமின்றி இலங்கையில் பொது முயற்சியாண்மையின் எதிர்காலமானது சுயாதீன மற்றும் கட்டுப்பாடு என்பவற்றுக்கிடையே சரியான சமநிலையைப் பெறணுவதிலேயே தங்கியிருக்கின்றது. ஒரு புறத்தில் நாடு சுயநிதியிடல் செய்கின்ற சுயமாக முகாமைத்துவம் செய்கின்ற பொதுமுயற்சியாண்மைகளில் சுய பொறுப்புள்ள, சுய ஒழுங்கு மரபைக் கொண்ட நிறுவனங்களை வேண்டி நிற்கின்ற அதேவேளை, மறுபுறத்தில் பல்வேறு தொழில் முயற்சிகளும், வினைத்திறனும், வகை கூறும் தன்மை சேவைக்கு ஒத்திருத்தல் போன்ற சில ஆகக் குறைந்த தராதரங்களையும் கொண்டிருக்க வேண்டியதையும் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் சுயாதீனத் தன்மையானது அதற்கு இசைவான சட்டவாக்கத்தில் உள்ளடக்கப்பட்டு இருப்பதோடு இது நிதி தொழிற்பாட்டு சுதந்திரங்களை வழங்குகின்றது. மேலும் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனமானது திறைசேரியிலிருந்து எவ்வித வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுக்காகவும் தங்கியிராத வழங்கி அதன் மூலதன செலவீனங்களுக்கான நிருமாண மற்றும் புதிய கட்டிடங்களுக்கான செலவிலும் கூட தங்கியிருப்பதில்லை .

அண்மைய ஆண்டுகளில் இலங்கையில் உயர் கல்வி கற்றல் நிறுவனங்களில் பெரும் புரட்சி ஏற்பட்டிருக்கின்றது. எவ்வாறாயினும் சுயநிதியிடுகின்ற நிறுவனங்களுக்கும் கணிசமான அளவு திறைசேரிக் அளிப்புகளில் தங்கியிருக்கின்ற அரச பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்களுக்குமிடையே ஒரு தனித்துவத் தன்மை காணப்படுகின்றது. முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானது அதன் பாடநெறி வழங்குகையில் மரபுரீதியற்ற முறைமைகள், குழு மற்றும் இடைத்தொடர்பு கற்றல் அமர்வுகள், கற்றல் வசதியளிப்பாளர்களின் பிரசன்னம் போன்ற அதன் தரங்களில் அத்தகைய நிறுவனங்களின் பாரிய திரட்டிலிருந்தும் ஒருவேற்றமைப்பைக் கொண்டதாக விருக்கின்றபோது, இதற்கு மேலதிகமாக வாடிக்கையாளரின் தேவை பகுப்பாய்வின் அடிப்படையில் அதன் முழுமையான வெளியீட்டாளர்களும், நிகழ்ச்சித் திட்டங்களும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் நோக்கம் யாதெனில் அரசு மற்றும் தனியார் துறை செயற்பாட்டாளர்களை தொழிலாளர்களாக மாற்றுவதே ஆகும்

தனியார் துறை தொழில் முயற்சியாண்மையாளர்களைப் பொறுத்தவரை அவற்றின் பிரதான வினைத்திறனாக இலாபத் தன்மை காணப்படுகின்றது. அரச உடமையான தொழில் முயற்சிகள் இலாபத் தன்மையானது. போதிய சுட்டியொன்றாக இருக்க மாட்டாது. அந்த வகையில் அத்தகைய பல தொழில் முயற்சிகள் அவை இலாப நோக்கற்ற தொழிற்பாடுகளை மேற்கொள்வதால் அவை இலாபங்களை உச்சப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டவையல்ல. எவ்வாறாயினும் திறைசேரிக்கு சுமையற்ற விதத்தில் ஒரு அரச உடமையான தொழில் முயற்சி செய்யப்படும் போது , எமது பார்வையில் அத்தகைய செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். செயலாற்றுகை அடிப்படையிலான கணக்காய்வு மட்டுமே முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தை அதன் செயலாற்றுகை மற்றும் சேவை வழங்கல் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்கு ஊக்குவிக்கும்.

நெகிழ்ச்சி தன்மையை பேணுவதற்கான எமது தேடலில் பல்வேறு வகையான தொழில் முயற்சிகளுக்கு வகைகூறுவதில் முகாமைத்துவம், மேற்பார்வை, உருவாக்கம் போன்றவற்றுக்கான தகுதிதிறன்களுக்கான தேவை எம்மிடமுள்ளது. இதன் விளைவாக பாரியளவிலான தொழில் முயற்சிகள் அதன் சுயமான நிதியிடல். அறிக்கையிடல் தனிப்பட்ட மற்றும் ஆளுகை ஏற்பாடுகளில் தொடர்ந்தும் நிலைத்திருக்கின்றன.

நிதிசார் சுயாதீனத் தன்மை மற்றும் மனித வளங்களின் கட்டுப்பாடு என்பவற்றின் குறைபாடானது கடுமையாக வரையறைகளை விதிக்குமென்பதோடு முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் நீண்டகால அபிவிருத்தி சந்தைமயமாக்குகை, செயலாற்றுகை முன்னேற்றம் என்பவற்றில் வரையறைகளைக் கொண்டு வரமுடியும். முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தைப் பொறுத்த வரையில் அதன் முழுதுமான உள்ளார்ந்த ஆற்றலை அடைவதற்கு எழுந்துவரும் போக்குகளுடன் இணைந்து போட்டி தன்மையில் முன்னிலையில் இருப்பதற்கு முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் முகாமைத்துவ சபை குறிப்பிட்டதொரு அளவுக்கு நிதிசார் சுயாதீனத் தன்மையைக் கொண்டிருத்தல் மிகவும் முக்கியமானதாகும்.

"தேசத்தின் முகாமைத்துவ ஆலோசகர்" என்று நாம் உரியவாறு கூறுகின்ற முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானது, அதன் நோக்கம், பணிக்கூற்று, பெறுமானங்கள் என்பவற்றுக்கமைவாக தேவையான ஆற்றலுடனும் நம்பிக்கையுடனும் தலைவர்களை உருவாக்குவதன் ஊடாக அதன் பெறுமானங்களை மேம்படுத்துவதற்கு மேலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஒப்பம்.
கலாநிதி சேனக்க கெலும் கமகே,
பணிப்பாளர்

அறிமுகம்


முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானது (PIM) தேசத்தின் முகாமைத்துவ வழிகாட்டி என்ற வகையில் தேவையான விவரங்களுடன் அதன் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை முன்வைப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றது. நிறுவகமானது அதன் அனைத்து திட்டமிட்ட நிகழ்ச்சித்திட்டங்களையும் உரிய நேரத்தில் பூர்த்தி செய்ததுடன் தொடர்ச்சியான சுமுகமான செயற்பாட்டை உறுதிப்படுத்தி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கோவிட் - 19 ஆகியவற்றின் பின்னர் மீண்டும் வெற்றிகரமாக அதன் செயற்பாடுகளை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகமானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் இணைக்கப்பட்ட ஓரளவு சுயாதீன தன்மையுள்ள அமைப்பாகும். அதன் நோக்கம் யாதெனில், பல்வேறுபட்ட முகாமைத்துவ நிருவாக கற்கைகளின் துறைகளில் பட்டப்பின்படிப்பு அறிவுருத்துகை, பயிற்சி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றை வழங்குவதன் ஊடாக இலங்கையில் முகாமைத்துவத் துறையில் உயர்கல்வி, தொழில்வாண்மைத்தன்மை என்பவற்றை மேம்படுத்துவதாகும். இன்று அது தொழில்சார் முகாமைத்துவ கல்வி மற்றும் பயிற்சியின் தேசிய நலன்களில் பரந்த அளவில் பணியாற்றி ஆயிரக்கணக்கான சிரேட்ட மட்ட முகாமையாளர்கள், நிர்வாகிகளுக்கு கற்றல் மற்றும் திறன் அபிவிருத்திக்காண சவால்மிக்க வாய்ப்புகளை வழங்குகின்றது. இலங்கையில் உயர் முகாமைத்துவ கல்வித்துறையில் முன்னோடியாக இருந்து முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் புத்தாக்கம் மற்றும் பரப்புகை முகாமைத்துவ அனுபவ வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் உயர் கற்றல் மாற்றீடுகளை தேடுபவர்களுக்கும் தலைமைத்துவத்தை வழங்கி நிற்கின்றது.

1978ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழான கட்டளைச் சட்டத்தினால் 1986 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் இலங்கை பல்கலைக்கழக முறைமையில் காணப்படுகின்ற பதினோரு பட்டப்பின்படிப்பு நிறுவனங்களில் ஒன்றாக இருக்கின்றது. ஒப்பீட்டு ரீதியில் இது வயது குறைந்ததொன்றாக இருப்பினும், நிறுவனங்களுக்கிடையில் இது அதிக மாணவர் சனத்தொகையை கொண்டதாக இருப்பதோடு நாட்டின் பல்கலைக்கழக முறைமையில் ஒரேயொரு சுய நிதியிட்ட உயர் கற்றல் நிறுவனமாக திகழ்கின்றது.

இந்நிறுவனத்தின் வரலாறானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் பட்டப்பின்படிப்பு கற்கைகள் பிரிவொன்று தாபிக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டைப் பின்னோக்கி செல்கின்றது. பிரிவானது, இரண்டு கனேடிய பல்கலைக்கழகங்களுடன் – ஒட்டாவா பல்கலைக்கழகம் மற்றும் கால்டன் பல்கலைக்கழகம் என்பவற்றுடன் இணைந்து சீடா (CIDA) நிறுவனத்தின் அனுசரணையுடன் முகாமைத்துவ துறையில் பட்டப்பின்படிப்பு கற்களை ஆரம்பித்தது. 1986 ஆம் ஆண்டில் பிரிவானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கீழ் தனியான நிறுவகமொன்றாக தரமுயர்த்தப்பட்டது. 1995 ஆம் ஆண்டில் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனமானது, லெஸ்லி ரணகல மாவத்தை, கொழும்பு 08 இல் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் - நிறுவனத்தின் கட்டமைப்பு



முகாமைத்துவ சபை

நிறுவனத்தின் கல்வி மற்றும் நிறைவேற்று சபையான முகாமைத்துவ சபை பின்வரும் அலுவலர்களைக் கொண்டமைந்துள்ளது.

பதவிவழி அங்கத்தவர்கள்

பேராசிரியர் திரு. அஜந்த எஸ் தர்மசிறி, பணிப்பாளர் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் (தலைவர்) (2021 மே 07 ஆம் திகதி வரை)

கலாநிதி – சேனக்க கெலும் கமகே, பணிப்பாளர், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (தலைவர்) (2021 மே 08 ஆம் திகதி தொடக்கம்)

பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் (பேராசிரியர் பீ.டீ.நிமல்)

பீடாதிபதி, பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் (சிரேட்ட பேராசிரியர். திரு.எம்.எம்.பத்மலால்)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்

திரு.கே.யு.தில்ருக்ஷி, பணிப்பாளர், அரச நிதி கொள்கை திணைக்களம், நிதி அமைச்சு

திரு. அசோக ஹெட்டிகொட, முகாமைத்துவ பணிப்பாளர், ஹெட்டிகொட குழுமம்

சிரேட்ட பேராசிரியர் திரு .லலித் கருணாநாயக்க, பீடாதிபதி, பிரயோக விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

திரு.அசங்க ரணசிங்க, நிறைவேற்று பணிப்பாளர், டீசல் மற்றும் மோட்டார் என்ஜினியர; PLC

திரு.தீபால் சூரியாரச்சி, முகாமைத்துவ ஆலோசகர்

திரு.ஏ.கே. செனெவிரத்ன, மேலதிக செயலாளர், உயர் கல்வி அமைச்சு

திரு. லலித் வீரதுங்க, மேண்மைதங்கிய சனாதிபதி அவர்களின் பிரதான ஆலோசகர்

திரு.லசந்த விக்கிரமசிங்க, பங்காளர், பி.ஆர். த சில்வா எண்ட் கம்பெனி

கற்கைச் சபை

நிறுவகத்தின் கற்கைச் சபையால் ஆண்டில் கற்பித்தல், பரீட்சைகள் மற்றும் ஆராய்ச்சிகளோடு தொடர்புடைய விடயங்களை ஒழுங்குறுத்தியதோடு பின்வரும் அங்கத்தவர்கள் பிரதிநிதியாளர்களாக செயற்பட்டுள்ளனர்.

வியாபார நிருவாகம் தொடர்பான கற்கை சபை

பேராசிரியர் திரு. அஜந்த எஸ் தர்மசிறி, பணிப்பாளர், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (தலைவர்) (2021 மே மாதம் 07 வரை)

கலாநிதி.திரு. சேனக்க கெலும் கமகே, பணிப்பாளர், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (தலைவர்) (2021 மே மாதம் 08 தொடக்கம்)

பேராசிரியர் யு. அநுர குமார, முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

கலாநிதி திரு.ட்ரவிஸ் பெரேரா, சிரேட்ட ஆலோசகர், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம்

கலாநிதி. திரு. எம்.ஆர். ப்ரேலிஸ், தலைவர், கெப்பிட்டல் ட்ரஸ்ட் செக்கியுரிட்டி தனியார் கம்பெனி

கலாநிதி ஏ.கே.எல், ஜயவர்தன, சிரேட்ட ஆலோசகர், முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்

கலாநிதி திரு.ட்ரசோ மென்டிஸ், சிரேட்ட ஆலோசகர், முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்

பொது நிருவாகம் தொடர்பான கற்கை சபை

பேராசிரியர் திரு. அஜந்த எஸ் தர்மசிறி, பணிப்பாளர், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (தலைவர்) (2021 மே மாதம் 07 வரை)

கலாநிதி.திரு. சேனக்க கெலும் கமகே, பணிப்பாளர், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (தலைவர்) (2021 மே மாதம் 08 தொடக்கம்)

கலாநிதி திரு.பெட்ரிக் அபேரத்ன, ஆலோசகர், கொள்கை முன்னெடுப்பு, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியம்

கலாநிதி திரு.இந்திரஜித் குமாரசுவாமி, முன்னாள் அதிபதி, இலங்கை மத்திய வங்கி

கலாநிதி. திரு. தமித த சொயிஸா, முன்னாள் பணிப்பாளர் நாயகம், பொது திறைசேரி

கலாநிதி லொயிட் பிரனாந்து, பொருளாதார ஆலோசகர்

கலாநிதி சரத் ராஜபத்திரண, பொருளாதார ஆலோசகர்

கலாநிதி டப்லியு ஏ. விஜேவர்தன, பொருளாதார ஆலோசகர்

கற்பித்தல் நடவடிக்கைகள்

கற்கைநெறி திட்டமும் முன்வைப்பும்

இவ்வாண்டில் நடாத்தப்பட்ட தத்துவவியல் முதுமாணி பட்டப்படிப்பு பட்டம், வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டம், (MBA), அரச நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டம் (MPA) நிகழ்ச்சித்திட்டங்கள் போன்று ஏனைய கற்கை மற்றும் தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் தரத்தையும் பொருத்தப்பாட்டையும் மேம்படுத்துவதற்காக புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. போட்டித்தன்மையில் முன்னணியில் இருப்பதற்காக மாணவர் பாடநெறி பாடவிதானங்களுக்கு பெறுமானங்களையும் வழங்கி வளர்ந்துவரும் போக்குகள் புதிய அறிவுத்துறைகளின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்டு இலங்கையின் தகைமைகள் சட்டகம் (SLOF) பிரகாரம் தயாரிக்கப்பட்டது.

பிரதான கற்கைநெறிகள்

வியாபாரம்/ பொது நிருவாகம் தொடர்பான தத்துவவியல் முதுமாணி பட்டப்படிப்பு (Ph. D)

1988 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தத்துவவியல் முதுமாணி பட்டப்படிப்பு கற்கைநெறியானது, தற்போதுள்ள உலகளாவிய அறிவை மேம்படுத்தும் பொருட்டு பங்களிப்புச் செய்யும் நோக்கங்களை யதார்த்தமாக்குவதற்கு, அதாவது கற்கை பணிகளை மேற்கொள்பவர்களுக்கு பொருத்தமான வடிவமைப்பாகும். நாம் அவர்களது ஆய்வு மற்றும் அறிவொளியை ஊக்குவிப்பதற்காக கூட்டுச் சூழலை உருவாக்கியுள்ளோம். எங்களின் மதிப்புடனான கூட்டதண்மையுடன், புகழ்பெற்ற வளவாளர்கள் தங்களது அரிய நிபுணத்துவ அறிவை வருங்கால பங்கேற்பாளர்களுக்கு தாராளமாக வழங்குகின்றனர். தரமானதும் முழுமையானதுமான கற்றலுக்கு வசதிகளை அளிக்கப்படுதல் வேண்டுமென நாம் நம்புகின்றோம். அவ்வாறு செய்வதன்மூலம் பணியமர்த்தப்பட்டவர்களை உள்ளூர் துடிப்புடனும், உலகளாவிய இருப்புடனும் பாரிய வல்லுநர்களாக மாற்றுகின்றோம்.

வியாபார நிருவாகம் தொடர்பான பட்டநிலைபின் படிப்பு பட்டம் (MBA)

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் வியாபார, நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு (MBA) கற்கைநெறியின் முன்னோடியாக செயற்பட்டுள்ளதுடன், வியாபார துறையில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட தலைவர்களை உருவாக்கியுள்ளது. தற்போது அது இலங்கையில் அதிக கேள்வி நிலவும் வியாபார நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு கற்கை நெறி ஆகும். வளர்ச்சியடையும் வியாபார தேவைகள் மற்றும் சவால்களை அடிப்படையாகக்கொண்டு இந்த கற்கைநெறி பொருட்டு அவ்வப்போது திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதுடன், கல்வியாளர்கள் மற்றும் துறையின் தொழில் வல்லுநர்கள் ஆகிய இரு தரப்புகளையும் கொண்டமைந்த உயர் தரத்துடன் கூடிய குழுவொன்று ஊடாக கற்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒப்படைகள் மற்றும் திட்டங்களின் வேலைகள் மூலம் வசதிகள் வழங்கும் செயலூக்கமிக்க கற்பித்தல் வியாபார நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு கற்கையானது, பங்காளர்களுக்கு அவர்கள் திரட்டுகின்ற அதி நவீன அறிவு அவர்களின் வேலை உலகத்திற்கு தொடர்புபடுத்துவதற்கும் ஏற்புடையதாக கொள்வதற்கும் உதவுகின்றது. இரண்டு ஆண்டுகளில் நிகழ்ச்சித்திட்டமானது, தர்க்கரீதியாகவும் தொடர்ச்சியாகவும் முகாமைத்துவ அடிப்படை தொடர்பான கற்கை, தொடக்கம் ஒருங்கிணைந்த கற்கை வரையும், அதன் பின்னர் தேர்ந்தெடுக்கப்படும் கற்கைநெறிகள் மற்றும் ஆராய்ச்சி கருத்திட்டம் வரையும் நகர்கின்றது. உள்நாட்டு மற்றும் சர்வதேச அங்கீகார நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட தரநியமங்கள் மற்றும் தேவைகள் மீது குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தப்படுகிறது.

அரசாங்க நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு (MPA)

1988 ஆம் ஆண்டில் அரச நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம் அறிமுகப்படுத்தியதன் பின்னர், மூன்று தசாப்தங்களுக்கு அதிகமான காலப்பகுதி முழுவதும், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் தமது கற்கை பங்காளர்களை அரச துறையின் உயர் பதவிகளை அடையச் செய்த முறை மற்றும் கற்கைநெறிகளை வெற்றிகரமாக முடிவுறுத்திய பின்னர் அவர்களின் கனவுகளை நிறைவேற்றிய முறை தொடர்பாக அபிமானத்துடன் சான்று பகிர்கின்றது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் அரச நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு கற்கைநெறி, கற்கை பங்காளர்களது தொழில்சார் பயணமானது அமைச்சு செயலாளர்கள் மற்றும் மேலதிக செயலாளர்கள் போன்ற உயர் மட்டம் வரை மாற்றமடைகின்றது. செயலாளர்கள், ஆணையாளர் நாயகங்கள், பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் இலங்கை நிருவாக சேவையின் சிரேட்ட உத்தியோகத்தர்கள் போன்ற உயர் பதவிகளை வகிக்கின்றவர்கள், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் அரசாங்க நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு கற்கைநெறியை கற்றவர்களாவார்கள். இந்த நிறுவனம் தமது அரசாங்க நிருவாகம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு கற்கைநெறி ஊடாக, இதுவரை உருவாக்கப்பட்டுள்ள அரச துறையில் உயர் அலுவலர்களின் ஆற்றலுக்கு சான்று பகிர்கின்றது. இக்கற்கைநெறிகளுக்கிடையில் கற்கை பங்களார்களுக்கு கிடைக்கப்பெறும் ஒட்டுமொத்த நலன் யாதெனில், சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக கிடைக்கப்பெறும் உயர் அறிவு மட்டுமல்ல, அரச துறைக்கு மிகவும் தேவையான சிறந்த தொடர்பாடல், தீர்மானம் எடுக்கும் ஆற்றல், சிறந்த பகுப்பாய்வு ஆற்றல், குழுச் செயற்பாடுகள், நெறிமுறைகள் மற்றும் நிருவாகம் என்பவற்றுக்கு அவர்களை மெருகூட்டலாகும். அண்மையில் மீண்டும் திட்டமிடப்பட்ட அரச நிருவாகம் தொடர்பான பட்டநிலைப்பின் படிப்ப கற்கைநெறிகளின் பாடவிதானம் அரசாங்க நிருவாகம் தொடர்பான பட்டநிலைபின் படிப்பு கற்கைநெறி கற்ற எமது பழைய மாணவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பின்னூட்டங்களின் பெறுபேறாகும்.

வியாபார நிருவாகம் தொடர்பான நிறைவேற்று பட்டப்பின் படிப்பு (EMBA)

2016 ஆம் ஆண்டில் வியாபார நிருவாகம் தொடர்பான நிறைவேற்று பட்டப்பின் படிப்பு பட்டம் அறிமுகப்படுத்தல் தொடக்கம், எமது கற்கை பங்காளர்கள் நிறுவன உலகத்தில் உயர் பதவிகளை அடைந்து கொள்ளும் முறை மற்றும் நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அவர்களின் கனவுகளை நனவாக்கும் முறை தொடர்பாக முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் அபிமானத்துடன் சான்று பகிர்கின்றது.

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் வியாபார நிருவாகம் தொடர்பான நிறைவேற்று பட்டப்பின் படிப்பு கற்கைநெறி, கற்கை பங்காளர்களின் தொழில்சார் பயணத்தை நிருவாக முகாமைத்துவ சபை வரை மற்றும் அதற்கு அப்பால் மாற்றம் செய்கின்றது. இந்த கற்கை நெறி ஓராண்டு காலம் நடைபெறுவதுடன், கற்கை பங்காளர்களுக்கு அறிவை வழங்கும் பொருட்டு செயலமர்வுகள், விடயகற்கை, கலந்துரையாடல்கள், வீடியோ சமர்ப்பித்தல் மற்றும் ஏனைய வகையில் அறிவு வழங்கும் முறைகள் மீது பிரதானமாக கவனம் செலுத்தப்படுகின்றது.

கல்வி முகாமைத்துவம் தொடர்பான அரச நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டம் (MPAEM)

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கல்வி முகாமைத்துவம் தொடர்பாக அரசாங்க நிருவாக பட்டப்படிப்பு என்பது வெறுமனே அரசாங்க நிருவாக பட்டப்படிப்பு பட்டம் வழங்குதல் மட்டுமல்ல. அது கல்வி முகாமைத்துவத்தின் தேர்ச்சி பெற்றுக்கொண்டு, கல்வி முகாமைத்துவம் தொடர்பாக அரச நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டதாரியாக ஆதலாகும். கல்வி – தொழிலில் நிருவாக மட்டத்தின் அலுவலர்களது பரந்தளவிலான அறிவு தேவைகள் தொடர்பான பகுப்பாய்வு மீது அதனை கவனமாக திட்டமிடப்பட்டு கட்டமைக்கப்பட்டள்ளது. மேலும் அது எமது கற்கை பங்காளர்களுக்கு கல்வி முகாமைத்துவ விடய துறையில் தேர்ச்சியினை பெற்றுக்கொள்வதற்கும், உள்நாட்டு உணர்வுடன் உலகளாவிய மனப்பாங்கை விருத்தி செய்வதற்கும், உதவு முகமாக புதிய கற்கைநெறகளை வழங்கும் முறை பின்பற்றப்படுகிறது. இது முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கல்வி கற்கைநெறி பட்டியலுக்கு புதிய சேர்ப்பாகும்.

வரியிடல் தொடர்பான வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டம் **(MBAT)**

வரியிடல் தொடர்பான வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு (MBAT) 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இது எமது கற்கை பங்காளர்களின் விசேட தேவைகள் மீது திட்டமிடப்பட்ட கற்கைநெறிகள் (signature programmes) தொடருக்காக சேர்க்கப்பட்டதாகும். உண்மையாகவே, தெற்கு ஆசியாவின் வரியிடல் தொடர்பாக முதலாவது விசேட வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு கற்கைநெறி இதுவாகும். உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் (IRD) ஐந்து உத்தியோகத்தர் குழுக்கள் பயிற்சியை வெற்றிகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், அதன் ஆறாவது உத்தியோகத்தர் குழுவை பயிற்றுவிக்கின்றோம். உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் உத்தியோகத்தர்களது முகாமைத்துவ ஆற்றல்களை மேம்படுத்தல் மற்றும் குறித்த திணைக்களம் தேசத்தின் வரி வருமானம் பொருட்டு மிக பயனுள்ள பங்காளர்களாக ஆக்குதல் இவ்வாறான கற்கைநெறி அமுல்படுத்துவதன் நோக்கமாகும்.

சுங்க மற்றும் சர்வதேச வியாபாரம் அத்துடன் வழங்கல் தொடர்பான வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டம் (MBACIT)

MBACIT கற்கைநெறியின் நோக்கம் யாதெனில், அரச வருமானங்களை சேர்த்தல் மற்றும் சமூக பாதுகாப்பு சட்டங்களை வலுவாக்குவதனை நோக்கமாகக்கொண்டு இலங்கை சுங்க (SLC) அலுவலர்களின் முகாமைத்துவ ஆற்றல்களை அதிகரித்தலாகும். மேலும் இந்த தகைமைகள் இலங்கை சுங்கத்தின் குறித்த அலுவலர்களது தொழில்சார் வளர்ச்சியின் தேவையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. MBACIT இன் மூன்றாவது குழு 2021 ஆம் ஆண்டில் அவரக்ளது கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

ஆண்டில் மாணவர் பதிவு

2021 ஆண்டில் பட்டப்பின் படிப்பு பட்டங்கள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் பொருட்டு மாணவர்களின் பதிவு அட்டவணை 01 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

அட்வைணை 1 – 2021 இல் மாணவர் பதிவு

கற்கைநெறி	**எண்ணிக்கை**
வியாபார நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு (கொழும்பு)	404
வியாபார நிருவாகத்தில் நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு (சர்வதேசம்)	56
வியாபார நிருவாகம் தொடர்பான நிறைவேற்று பட்டப்பின் படிப்பு	22
சுங்கம் மற்றும் சர்வதேச வியாபாரம் அத்துடன் வழங்கல் தொடர்பான வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு	42
மொத்தம்	524

மூலம் - முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தரவு களஞ்சியம்

ஆண்டில் பட்டப்பின் படிப்பு பெறுபேறுகள்

கல்விசார் கற்கைநெறிகளை வெற்றிகரமாகவும் உரிய நேரத்திலும் நடாத்தப்பட்டன. இவ்வாண்டுக் காலப்பகுதியில் கலாநிதி, பட்டப்பின்படிப்பு மற்றும் பட்டநிலை பின்படிப்பு தேவைப்பாடுகளை பூர்த்திசெய்த பட்டப்பின்படிப்பு மாணவர்களின் எண்ணிக்கை அட்டவணை 2 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.

அட்வைணை 2 – 2021 இல் பட்டப்பின் படிப்பு பெறுபேறுகள்

கற்கைநெறி	எண்ணிக்கை
வியாபார நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம்	02
வியாபார நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம்	266
வியாபார நிருவாகம் தொடர்பான நிறைவேற்று பட்டப்பின் படிப்பு பட்டம்	14
வரியிடல் தொடர்பான வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டம்	56
சுங்கம் மற்றும் சர்வதேச வியாபரம் தொடர்பான வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டம்	19
அரசாங்க நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம்	28
முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	09
அரசாங்க நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	02
மொத்த பட்டதாரிகளின் எண்ணிக்கை	396

மூலம் - முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தரவு களஞ்சியம்



வருடாந்த பீட ஓய்வு (Retreat) –

நிறுவகத்திற்கான சமகால மற்றும் எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்து அதை பயனுறுதிமிக்க மேம்பாடுகள் மற்றும் மீள் நிலைப்படுத்துதல் நோக்குடன் அதன் அனைத்து பிரதான பணிகள் மற்றும் தொழிற்பாடுகளுடன் நிறுவகத்தின் அந்தஸ்தை எடுத்துக் காட்டுவதும் பாரிய வெற்றியை அடைவதும் முகாமைத்துமுவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் வருடாந்த பீட ஓய்வின் பிரதான நோக்கமாகும். உண்மையில் ஒரு பயன்மிக்க பீட பயிற்சிப் பட்டறைகள் கல்விச் சமூகத்தில் புதிய உயிரோட்டமாக வாழ்க்கையை சுவாசிக்கச்செய்யும் என்பதோடு, பயிற்சிப் பட்டறையின் சிறந்த ஒழுங்குப்படுத்தப்பட்ட உள்ளடக்கம் நிறுவகத்தின் அடையாளத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் என்பதோடு பகிர்ந்துக்கொண்ட உணர்வை பிரதிபலித்து முன்னோக்கிச் செல்ல முடியும். இந்த நோக்கங்கள் இவ்வருட வருடாந்த பயிற்சிப் பட்டறையில் அனேகமாக அடையப்பெற்றன. நாட்டில் நிலவும்


நிலைமை மீது, 2021 ஆம் ஆண்டில் வருடாந்த பீட பயிற்சி பட்டறை ஒத்திவைக்க நேரிட்டது. ஆயினும் மாதாந்த பீட கூட்டங்களில் ஏற்புடையதான விடயங்களை கலந்துரையாடியதுடன், தீர்மானங்களை நடைமுறைப்படுத்தப்பட்டது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் வியாபார நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகளை வெளிநாடுகளில் ஆரம்பித்தல்

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானது இலங்கைக்கு அப்பாலும் அதன் சிறகுகளை விரித்து முகாமைத்துவ கல்வித் துறையில் கீர்த்திமிக்க மத்திய நிலையமொன்றாக விளங்கி வருகின்றது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கட்டார், ஓமான் மற்றும் குவைத் நகரம் ஆகிய நாடுகளில் நிறுவகத்தின் வியாபார நிருவாகம் தொடர்பான பட்டப்பின் கற்கைநெறி வெற்றிகரமாக ஆரம்பமானது, 2015 -2021 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற ஒரு கணிசமான அடைவாகும். 2020 ஆம் ஆண்டு அதன் சிறகுகளை மேலும் அகல விரித்து முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவாகமானது குறித்த கற்கைநெறியை பஹ்ரேன் மனாமாவில் ஆரம்பித்தது. 2021 ஆம் ஆண்டில் வியாபார நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு கற்பதற்காக அளவில் சர்வதேச(ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கட்டார், ஓமான் மற்றும் குவைத்) குழுவில் 56 மாணவர்களைப் பதிவாக்கியுள்ளது. முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானது இந்த செயல்முறையை மத்திய கிழக்கின் ஏனைய நாடுகளிலும் கிட்டிய எதிர்காலத்தில் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது.

இலங்கை பல்கலைக்கழக முறையில் வெளிநாட்டில் உள்ளூர் பட்டப்பின் படிப்பு வழங்குகின்ற ஒரேயொரு நிறுவகமாக முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் திகழ்கின்றது. இந்த வெளிநாட்டுப் பாடநெறிகளை நடாத்துவதன் ஊடாக கணிசமான வகையில் அந்நியச் செலாவணி உழைக்கப்படுகிறது.



இவ்வாண்டு காலப்பகுதியில் முக்கியமான அடைவுகள் (கற்பித்தல்)

1. ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கட்டார், ஓமான் மற்றும் குவைத் ஆகிய நாடுகளில் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் வியாபார நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு இணைந்த கற்கைநெறி ஆரம்பித்தல்.

2. நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் மாணவர்களின் பொருட்டு இயங்கலை அமர்வுகள் மற்றும் வீட்டிலிருந்து மேற்கொள்கின்ற தேர்வுகளை மேம்படுத்தல்

3. நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் மாணவர்களின் பொருட்டு போதனை அமர்வுகள், ஒரு பகுதி பௌதீக ரீதியாகவும் ஒரு பகுதி இணையத்துடன் நேரடியாகவும் (கலப்பு அமர்வுகள்) (hybrid sessions) விரிவுபடுத்தல்

4. ப்ரக்ஞா கற்றல் (Pragana Learning Portal) அம்சங்களைப் பயன்படுத்தி (hybrid sessions) பயன்பாட்டின் பலனை அதிகரித்தல்

5. Turn – it – in மென்பொருள் ஊடாக சமன்பாட்டு சுட்டி ஊடாக கல்விசார் வழிகாட்டல்கள் மீது தொடர்ச்சியாக இணங்கியொழுகுதல்

6. கல்வி நிருவாகத்தை முறைசார்படுத்தும் பொருட்டு நிறுவனத்தின் எல்லா கற்கை நிகழச்சித்திட்டங்கள் பொருட்டும் கற்கை ஒருங்கிணைப்பாளர்களை நியமனம் செய்தல்.

7. புதிய கற்கை முகாமைத்துவம் தொடர்பாக அரசாங்க நிருவாக பட்டப்பின் படிப்பு கற்கைநெறிக்காக, கற்கை பங்காளர்களை பதிவு செய்வதற்கு கல்வி அமைச்சுடன் உடன்படிக்கை கைச்சாத்திடல்

8. நிறுவனத்தால் வழங்கப்படும் எல்லா கல்வி நிகழ்ச்சித்திட்டங்களினதும் தரத்தினை மேற்பார்வை செய்வதற்காக முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் தரச் சான்றுப்படுத்தல் மற்றும் அங்கீகார நிலையம் தாபித்தல்

ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்

இலங்கையில் முகாமைத்துவம் தொடர்பான ஆராய்ச்சி மேலும் உயர் முன்னேற்றத்தை அடைதல் வேண்டும். எமக்கு மேலும் விடயத்துறையில் ஆராய்ச்சி மரபுகளை வளர்ச்சி செய்ய வேண்டியுள்ளது. எமது பிரதான ஆராய்ச்சி முயற்சிகள் கருத்தியலொன்றை வடிவமைப்பதற்கான சவால் வழிகாட்டப்படுதல் வேண்டும். நாம் கருதுவதுபோல் ஆராய்ச்சின் பிரதான நோக்கம் யாதெனில், முகாமைத்துவத்தை தொழிலொன்றாக வளப்படுத்துவதற்கான சுதேச கருப்பொருளொன்றின் தேடலாகும். இந்த நோக்கத்திற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட மட்டங்களுக்கு தரமுயர்த்தக் கூடியதாக ஆராய்ச்சி வெளியீடுகளின் ஊடாக ஆராய்ச்சிகளுக்கான முறைமைகளையும் தர்க்கரீதியான அணுகு முறைகளையும் நாம் நாடுகின்றோம்.

2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 350 இற்கும் மேற்பட்ட மாணவர் ஆராய்ச்சி திட்டங்களைப் பூர்த்தி செய்யப்பட்டதோடு, அவற்றை நிறுவன நூலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அவற்றை நிறுவனத்தில் நூலகத்தில் (Hard copy) பெற்றுக்கொள்ளலாம். ஆராய்ச்சி கருத்திட்டங்கள், ஆறு ஆராய்ச்சி குழுக்களுக்கிடையில் விரிவாக்கப்பட்டது. அவை முகாமைத்துவ ஆற்றல் ஆராய்ச்சி திட்டங்கள், தொழில்முயற்சி ஆற்றல் ஆராய்ச்சி திட்டங்கள், முகாமைத்துவ களக் கற்கை ஆராய்ச்சி திட்டங்கள், முகாமைத்துவ விடய ஆய்வு ஆராய்ச்சி திட்டங்கள் மற்றும் முகாமைத்துவ ஆராய்ச்சி திட்டங்கள் ஆகும். இந்தக் திட்டங்க் பயன்பாட்டு மற்றும் சமூக ஆராய்ச்சி ஆகிய இரண்டையும் குறிக்கின்றன.

தத்துவவியல் முதுமாணி பட்டப்படிப்புக்கான பட்டதாரி பயிற்சி பட்டறைகள்

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஆராய்ச்சி நிலையம் தத்துவவியல் முதுமாணி பட்டப்படிப்பு மாணவர்களின் பொருட்டு ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் கருத்துக் கட்டுரையை வெளியிடுவது குறித்து தத்துவவியல் முதுமாணி பட்டறைகளைத் தொடங்கியுள்ளது. தத்துவவியல் முதுமாணி பட்டப்படிப்பை முடிப்பதில் அதிக மாணவர்கள் தீவிரமாக ஈடுபட ஊக்குவிப்பதற்காக ஒரு புதிய முயற்சியாக பிற பல்கலைக்கழகங்கள் மற்றும் பட்டப்பின் படிப்பு முகாமைத்துவ நிறுவனத்தில் இருந்து வளவாளர்கள் அழைக்கப்பட்டனர். இந்த பட்டறைகள் அளவு மற்றும் தரம் தொடர்பான அடிப்படையில் ஆராய்ச்சி வடிவமைப்புகளில் கவனம் செலுத்தியது. இந்த பட்டறைகளின் அடிப்படையானது சிறிய குழு விவாதங்கள் ஆகும், அங்கு அளவு மற்றும் தரமான முறைகள் இரண்டிற்கும் குறிப்பிட்ட வழிமுறைகள் விவாதிக்கப்பட்டன. பங்கேற்பாளர்கள் ஆராய்ச்சி வடிவமைப்பிற்கான வெவ்வேறு அணுகுமுறைகளை முன்வைத்தனர், மேலும் இந்த பட்டறைகள் தத்துவவியல் முதுமாணி மாணவர்களின் பணிக்கான அணுகுமுறைகளைப் பாராட்ட வழிவகுத்தது.

தத்துவவியல் முதுமாணி பட்டப்படிப்பு மாணவர்களின் முன்னேற்றம்

நான்கு தத்துவவியல் முதுமாணி மாணவர்கள் முன்மொழிவுக்கு ஆதரவாக கருத்துகளை வழங்குதல் மற்றும் கருத்துத் தாளை நிறைவு செய்துள்ளனர். ஒரு நபர் ஆய்வறிக்கையை முடித்துள்ளதுடன், மேலும் இருவர் தரவு சேகரிப்பு கட்டத்தை முடித்தனர். இரண்டு மாணவர்கள் 2022 இல் தத்துவவியல் முதுமாணி பட்டத்தை முடிக்க எதிர்பார்க்கிறார்கள்.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தத்துவவியல் முதுமாணி பட்டப்படிப்புகளுக்கான இடங்கள்

சர்வதேச உயர்நிலைப் பட்டப்படிப்பை (Ph.D) முடிக்க விரும்பும் ஆராய்ச்சி மாணவர்கள் அதற்கான இடத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது, ஆனால் அதை மேற்கொள்ளும் திறன் மாணவர்களின் திறமையை மட்டுமே சார்ந்துள்ளது. பல சமயங்களில், ஆராய்ச்சித் திட்டங்களில் பணிபுரியத் தேவையான திறன்களும் அனுபவமும் இல்லாததால், தரவரிசையில் உள்ள பல்கலைக்கழகத்தில் ஒரு இடத்தைப் பெறுவதில் மாணவர்கள் வெற்றிபெற மாட்டார்கள். ஆய்வறிக்கை மற்றும் வெளியீட்டுடன் ஆராய்ச்சியை முடித்த முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பட்டதாரிகள் விரும்பிய ஆராய்ச்சி திறன்கள் மற்றும் விடாமுயற்சி, ஒழுக்கம் மற்றும் கல்விதுறையில் எழுதும் திறன்களை நிரூபித்துள்ளனர். அவர்கள் ஆஸ்த்ரேலியா, நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் உள்ள அதிக போட்டித்தன்மை கொண்ட பல்கலைக்கழகங்களில் நுழைவை பெற்றுள்ளனர். இந்த

ஆராய்ச்சி வெற்றிகள் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் வியாபார நிருவாகம் தொடர்பான ஆராய்ச்சி பட்டப்பின் படிப்பு பட்டம் (MBA) இன் பலத்தை நிரூபிக்கின்றன. மேலும், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தால் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் முழுவதிலும் உள்ள வருங்கால இளம் அறிஞர்களுக்கு கல்விசார் வாழ்க்கைப் பாதையை வழங்கியுள்ளது. 2021 ஆம் ஆண்டில், ஆஸ்திரேலியாவின் வொல்லொங்காங் பல்கலைக்கழகம் மற்றும் ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் இரண்டு மாணவர்கள் முதுதத்துவவியல் முதுமாணி பட்டங்களைப் பெற்றுள்ளனர், இதன் மூலம் தற்போது முதுதத்துவவியல் முதுமாணி கற்கைநெறிகளுக்காக வெளிநாடுகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 8 ஆக உள்ளது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஆண்டு ஆராய்ச்சிக் குழு (PIMARC)



முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் வருடாந்த ஆராய்ச்சி மாநாடு (PIMARC 2021) 2021 நவம்பர் மாதத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பேராசிரியர் அஜந்தா எஸ் தர்மசிறி மற்றும் கலாநிதி நிலக்ஷி கலஹிட்டியாவ ஆகியோர் இணைந்து சம தலைமைத்துவத்தை வழங்கினார்கள். பிரதம அதிதியாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் திரு.சுதந்த லியனகே கலந்து கொண்டார். குயின்ஸ்லாந்து பல்கலைகழகத்தின் நிதிப் பிரிவில் விருதுபெற்ற பேராசிரியர் ராபர்ட் சிறப்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக பேராசிரியர் பி.டி. திரு. நிமல் கலந்துகொண்டார்.

மாநாடு பிரதானமாக நான்கு முக்கிய துறைகளைக் கொண்டமைந்திருந்தன. ஆர்வமுள்ள தரப்பினருடன் ஆராய்ச்சிக்கான கருத்து தொடர்பாக உரையாடலை ஆரம்பிக்கும் (Pitching Research) தேசிய போட்டி, தத்துவவியல் முதுமாணி பட்டப்படிப்பு கற்கை மாநாடு: (Colloquium): ஆராய்ச்சி பத்திரங்கள் மற்றும் தொழில்துறை உரையாடல் இரண்டு நாட்கள் நடைபெற்றது. PIMARC 2021 இன் முக்கிய அம்சம் யாதெனில், இலங்கையில் முதன்முறையாக நடாத்தப்படும் பங்காளர்களுடன் ஆராய்ச்சி தொடர்பான கருத்தரங்கை ஆரம்பிக்கும் தேசிய போட்டியான (Pitching Research) ஐ அறிமுகப்படுத்தலாகும். இறுதிப் போட்டிக்கு 15 பேர்களைக் கொண்டமைந்திருந்த ஆரம்பக் குழுவிலிருந்து, தத்துவவியல் முதுமாணி பட்டப்படிப்பு கற்கின்ற ஐந்து மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பங்காளர்களுடன் ஆராய்ச்சி தொடர்பான கலந்துரையாடலை ஆரம்பிக்கும் (Pitching Research) தேசியப் போட்டி (NPRC) என்பது இலங்கையில் நடைபெறும் InSPiR2eS உலகளாவிய போட்டியின் எதிரொலியாகும். NPRC 2021 இலங்கையில் முதன்முறையாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின்

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் அதன் வருடாந்த ஆராய்ச்சி மாநாட்டின் (PIMARC) மையப் புள்ளியாக ஏற்பாடு செய்யப்பட்டது. SPiR2eS Global Pitching ஆராய்ச்சிப் போட்டிக்கு இணையாக, இலங்கையில் நடைபெற்ற போட்டிக்காக முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் இணைந்து பணியாற்றியதுடன், அதன்போது PRF உருவாக்கிய பேராசிரியர் Robert Faff , IGPRC இன் இலங்கை ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் வசந்த பெரேரா பாரிய பணியை ஆற்றியதுடன், அறக்கட்டளை தூதுவர் InSPiR2eS குளோபல் ஆராய்ச்சி வலையமைப்பில் பேராசிரியர் அதுல மானவடுகே ஒரு முன்னணி வகிபாகத்தை வகித்தார்.

தத்துவவியல் முதுமாணி பட்டப்படிப்பு கற்கை மாநாட்டில் (colloquium) நான்கு கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த ஆவணங்கள் ஒழுங்குறுத்தப்படாத, அரசு சாராத உயர்கல்வியின் தரம், அறிவு சார்ந்த பொருளாதாரத்திற்காக நிறுவனத்திற்குள் அறிவு, ஆய்வு மற்றும் பயன்பாடு, பணியாளர் சமூக மூலதனம் மற்றும் டிஜிட்டல் மாற்றத்தின் போது நிறுவன செயல்திறன் தொடர்பாக ஊழியர் சமூக மூலதனம், நிறுவன அறிவை முகாமைத்துவம் செய்யும் ஆற்றல், நிதி மோசடியின் கணக்கீட்டு முன்னோக்கு. குற்றவியல் உளவியல் மற்றும் நடத்தைக்காக குழுக்கள் ஆய்வு செய்யப்பட்டன.

PIMARC 2021 இல் நிறுவன நடத்தை மற்றும் செயல்பாட்டு முகாமைத்துவம் என்ற கருப்பொருளின் கீழ் பத்து ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன, மேலும் நிறுவன நடத்தை விடய துறையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள், நெறிமுறையற்ற வகையில் முடிவெடுத்தல் மற்றும் நிறுவன உறுப்பினர்களால் தங்கள் முதலாளிகளின் கட்டுப்பாட்டின் கீழ் சாத்தியமான சட்ட விரோதமான, துஷ்பிரயோகங்கள் போன்ற செயற்பாடுகளை அது தொடர்பாக செயற்பட முடியுமான நபர்களிடம் அல்லது அல்லது நிறுவனங்களுக்கு வெளிப்படுத்துதல் (Whistle – Blowing Intention), கண்ணியமான வேலை நடைமுறைகள், மரியாதைக்குரிய பெண்ணியம், ஆய்வுகள், ஆன்மீகம், நிலையான நுகர்வு மற்றும் தொழில் முனைவோர் நோக்கத்தின் கட்டுப்பாட்டின் இருப்பிடத்தில் கவனம் செலுத்துகின்றன. இந்த ஆய்வுகள் அளவு மற்றும் தரமான முறைகள் இரண்டின் பயன்பாட்டையும் விளக்குகின்றன, மேலும் கல்வி மற்றும் தொழில்துறை இரண்டிற்கும் பயனளிக்கும் தத்துவார்த்த மற்றும் நிர்வாக முன்மொழிவுகளை வழங்குகின்றன.

PIMARC தொழில் தொடர்பான உரையாடல் Industry Dialogue 2021 என்பது பொதுவான பிரச்சினைகளை மையமாகக் கொண்ட தொழில் மன்றங்களைப் போலல்லாமல், பரந்த சமூகத்தின் மேம்பாட்டிற்காக அசல் ஆராய்ச்சி அறிவை நடைமுறையில் மாற்றம் செய்தல் இங்கு நோக்கமாகும்.

தொழில்துறை உரையாடலில் வழங்கப்பட்ட மூன்று கட்டுரைகளாவது, தனிப்பட்ட செயல்திறனில் மதிப்பீட்டாளரின் பயிற்சிப் பாத்திரத்தின் விளைவு, அணுகல் அடிப்படையிலான சேவைகளின் உளவியல் உரிமையின் மீதான உளவியல் பாதுகாப்பு மற்றும் சுய-அமைப்பின் தாக்கம் மற்றும் பெண் வழக்கறிஞர்கள் தடைகளைத் தாண்டி முன்னேறுவதற்கு என்ன காரணம் - இலங்கையில் சட்டக் கல்வி மற்றும் தொழில்முறை நிறுவனங்களுக்கான ஒரு முன்மொழிவு என்பனவாகும்.

ஆய்வுக்கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்ட நிபுணர் உரையொன்று நடாத்தப்பட்டதுடன், பேராசிரியர் அஜந்த எஸ்.தர்மசிறி அவர்களினால் வழிநடாத்தப்பட்டது. இந்த குழுவில் திருமதி பர்ஸானா ஜெமீல், கலாநிதி சமித பெரேரா, கலாநிதி மல்ராஜ் கிரியெல்ல மற்றும் திரு.அசங்க ரணசிங்க ஆகியோர் அடங்குவர்.

மேற்கோள்கள் (Citations) மற்றும் எச் சுட்டிகள் (H Index)

அடிப்படை பீடங்களை மேற்கோள் காட்டுதல் 567 ஐ எட்டியது, பீடங்களில் இரண்டு அங்கத்தவர்களுக்கு H சுட்டி ஏழுக்கு அதிகமாவதுடன், 10 பேர் ஐந்துக்கும் அதிகமான குறியீட்டைக் கொண்டுள்ளனர். தரப்படுத்தல் சஞ்சிகைகளில் வெளியிடுவதற்கும், ஆராய்ச்சி திட்டங்களில் ஈடுபடுவதற்கும் ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

வெளியீட்டுப் பிரிவு மொத்தப் பகுப்பாய்வு - மேலோட்டம்

மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் வெளியீட்டுத் துறையில் திருப்திகரமான முன்னேற்றம் காண்பிக்கப்பட்டுள்ளது.

i) PIM Presentation guidelines: (விளக்கக்காட்சி வழிகாட்டுதல்கள்) முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பதவியணி மற்றும் மாணவர்களால் காகித எழுத்து மற்றும் விளக்கக்காட்சியில் சீரான தன்மையை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட கையேடு "PIM Presentation guidelines" வெளியிடப்பட்டது. இந்த புத்தகம் நிலையான விதிகள் மற்றும் இணக்கத்திற்கான வழிகாட்டுதல்களின் தொகுப்பை வழங்குகுவதுடன், பெரும்பாலும் அமெரிக்க உளவியல் சங்கத்தின் கையேட்டில் காட்டப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டது. இந்த வெளியீட்டினை தயாரிப்பதற்கு பீடமும் பங்களித்துள்ளது.

ii) Sri Lanka journal of management (SLJM) : 1996 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனத்தின் காலாண்டு சஞ்சிகை மற்றும் கலந்துரையாடலுக்கான மன்றத்தை தொடர்ந்து வழங்குகிறது. SLJM இன் இரண்டு பாரிய (bumper) வெளியீடுகளை 2021 இல் வெளியிட்டது. SLJM இன் முதன்மை நோக்கம் யாதெனில், முகாமைத்துவத்திற்கு ஏற்புடையதான பிரச்சினைகளை தீர்த்தல் மற்றும் நிறுவனத்தினதும் மாணவர்களதும் மிகச் சிறந்த ஆராய்ச்சி கருத்திட்டங்களின் பெறுபேறுகளை பரப்புவதற்கு ஒரு ஊடகத்தை வழங்குவதாகும். வெளியீடுகளின் பொருட்டு அவர்களின் பங்களிப்பை அனுப்பி வைக்குமாறு கைத்தொழிலில் ஈடுபடும் நபர்களையும் அழைக்கப்பட்டது.

iii) The Professional Manager: SLJM இற்கு மேலதிகமாக இரு வருட சஞ்சிகை, நவீன உலகில் முகாமையாரள்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தொடங்கப்பட்டது. இது ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டு சார்பு இல்லாமல் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய பாணியில் அதிநவீன முகாமைத்துவ அறிவைப் பரப்புகிறது. " The Professional Manager" சிக்கலான மற்றும் கொந்தளிப்பான சூழலில் செயல்படும் இன்றைய முகாமையாளர்களுக்கு சரியான நேரத்தில் மற்றும் முக்கியமான சிக்கல்களை எடுத்துக்காட்டுகிறது. வெளியீட்டின் இரண்டு தொகுதிகள் 2021 இல் அச்சிடப்பட்டன.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் செயற்பாடு திட்டத்தின் முக்கிய அங்கமாகும். நன்கு எழுதப்பட்ட வெளியீடுகள், முக்கியமான கண்டுபிடிப்புகள் மற்றும் இலக்கு பார்வையாளர்களுக்கு முக்கியமான கண்டுபிடிப்புகளை அவர்களிடம் கொண்டுச் செல்லுதல் போன்ற நிறுவனத்தின் தொடர்ச்சியான ஆராய்ச்சி மேம்பாட்டுகளுக்கும், அறிவு மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நிறுவனத்தின் பல செயல்பாடுகளுக்கும் உதவுகின்றன. எனவே, முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் வெளியீடுகள் பிரிவு, அதன் முதன்மை வெளியீடுகளான "Sri Lankan Journal of Management" மற்றும் "Professional Manager" உட்பட நிறுவனத்தால் தொடங்கப்பட்ட அனைத்து ஆவணங்களையும் வெளியிடுவதன் மூலம் நிறுவனப் பங்களிப்பின் தொடர்ச்சியான நீரோட்டமாக செயல்படுகிறது. மேலும், வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டம், அரசாங்க நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டம், வியாபார நிருவாக நிறைவேற்று பட்டப்பின் படிப்பு பட்டம், தத்துவவியல் முதுமாணி பட்டப்படிப்பு மற்றும் நிறுவனத்தால் நடாத்தப்படுகின்ற பிற கற்கைநெறிகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட பாடப்புத்தகங்கள் மற்றும் பிற வாசிப்புப் பொருட்களை வெளியிடுவதற்கு இந்தப் பிரிவு ஒத்துழைப்பு வழங்குகின்றது. சரியாகச் சொல்வதானால், இந்தப் பிரிவு நிறுவனத்தின் கட்டமைவு, திட்டமிடல், தொகுத்தல் மற்றும் தளவமைப்பு தயாரித்தல், டெஸ்க்டொப் வெளியீடு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றுள்ளது.

Sri Lankan Journal of Management (SLJM)

- Sri Lankan Journal of Management (SLJM), தொகுதி 26, இதழ் - இலக்கம் 1 (2021 சனவரி தொடக்கம் யூன் வரை)
- Sri Lankan Journal of Management (SLJM), தொகுதி 26, இதழ் - இலக்கம் 2 (2021 யூலை தொடக்கம் திசெம்பர் வரை)
- **The Professional Manager**
- The Professional Manager – தொகுதி இலக்கம் 13 (1), இதழ் - இலக்கம் 20 (2021 ஏப்ரல்)
- The Professional Manager – தொகுதி இலக்கம் 13 (2), இதழ் - இலக்கம் 21 (2021 நவம்பர்)

ஏனைய முக்கியமான வெளியீடுகள்

- பீடங்களின் கையேடுகள்
- "PIM Cases in Management – 2021" (பக்கங்கள் 230)
- "Reflecting Reality through Research" – ஆராய்ச்சி அறிக்கை 2015-2020 (பக்கங்கள் 280)
- மாணவர் கையேடு (திருத்தம் செய்யப்பட்ட தொகுப்பு)
- மாடி வீடுகளின் கைத்தொழில் தொடர்பான கல்வி ஆய்வுக் கட்டுறை
- MBA, MPA, MBA-ICT கற்கைநெறி கையேடுகள்
- கல்விசார் சமர்ப்பித்தலின் வழிகாட்டல்கள் (திருத்தம் செய்யப்பட்ட ஏழாவது தொகுப்பு)
- மாணவர் கைந்நூல் -2022 – (இற்றைப்படுத்தி தொகுக்கப்பட்டது)
- முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் கற்கைநெறி கைந்நூல் – (இற்றைப்படுத்தி தொகுக்கப்பட்டது)
- PIMARC – முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கைத்தொழில் உரையாடலுடன் வருடாந்த ஆராய்ச்சி மாநாடு: இலத்திரனியல் புத்தகம்.

ஆண்டின் ஊடக அறிவிப்பு

- முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம் தமது வியாபார நிருவாக பட்டப்படிப்பை ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஓமான், குவைத் போன்ற நாடுகளில் அமுல்படுத்துகின்றது.
- முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தால் சுங்கம் மற்றும் சர்வதேச வியாபாரத்துடன், புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் தனியார் கம்பெனிக்காக "TECHNOCRATS நிகழ்ச்சித்திட்டம் முடிவுறுத்துகின்றது.
- "PIM Genesis Incubator" சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் வளர்ச்சி மற்றும் வியாபார பெயருக்கு மூலோபாய திட்டங்களை தயாரிப்பதற்கு உதவியளிக்கின்றது.
- சிரேட்ட வியாபார முகாமையாளர்கள், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் வியாபார நிருவாக நிறைவேற்று பட்டப்பின் படிப்பு பட்டத்துடன் தொடர்பு கொள்கின்றது.
- முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் பேராசிரியர் சிசிர ஜயகொடி ஞாபகார்த்த ஆராய்ச்சி நிலையம் ஆரம்பித்துள்ளது.
- முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் ஹேமாஸ் ஹொஸ்பிடல்ஸ் தனியார் கம்பெனி பொருட்டு நிறைவேற்று அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (EDP) நடைமுறைப்படுத்துகின்றது.
- கலாநிதி டப்ளியூ ஜீ.எஸ்.கெளும் அவர்கள் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் புதிய பணிப்பாளராக கடமைகளை பொறுப்பேற்றார்.
- முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் ஹேமாஸ் மருத்துவமனையில் நிறைவேற்று தரத்தினரை மேம்படுத்துகின்றது.
- " PIM Genesis" – நாளைய நாளின் தொழில்முயற்சியாளர்களை இன்று புத்துயிர் ஊட்டல்.

- முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் இதுவரையில் தமது மிகப்பெரிய மாணவர் குழுக்களுடன் வியாபார பட்டப்பின் படிப்பு கற்கைநெறியை அமுல்படுத்துகின்றது.
- சுங்கம் மற்றும் சர்வதேச வியாபாரம் தொடர்பான முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டம்

ஆண்டுக்கான அடைவுகள் (ஆராய்ச்சி)

1. வெளியீடுகள் மற்றும் மாநாடுகளின் கல்விசார் சமர்ப்பித்தலில் காண்பிக்கப்படுகின்ற பலம் மற்றும் புத்தணர்வு
2. "Sri Lankan Journal of Management (SLJM)" EBSCO ஆல் தொடர்ச்சியாக உபசரணை வழங்கப்படுகிறது.
3. வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு ஆய்வு கட்டுரை பூர்த்தி செய்த இரண்டு மாணவர்களின் பொருட்டு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் தத்துவவியல் முதுமாணி பட்டப்படிப்புக்காக இரண்டு இடங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.
4. தத்துவவியல் முதுமாணி பட்டப்படிப்பு கற்கின்ற இரண்டு மாணவர்கள் அவர்களின் இறுதி ஆய்வுக்கட்டுரைகளைப் பூர்த்தி செய்கின்றனர்.
5. வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு இறுதி ஆண்டு மாணவர்கள் மேற்கொண்ட கைத்தொழில் கணக்காய்வினை அடிப்படையாகக்கொண்டு (Monograph) ஆய்வுக் கட்டுரைகளை அறிமுகப்படுத்தல்
6. முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் இணையதளம் பொருட்டு புதிய மாணவர்களின் வங்கி ((Digital Repository) ஆரம்பித்தல்.

பங்காண்மை

தொழில்முயற்சிகளுடனான உறவுகளும் ஆலோசனைகளும்

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனமானது, முகாமைத்துவ சபை, கற்கை சபை, பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முக்கிய பீட உறுப்பினர்களின் அங்கத்துவம்/பங்களிப்பு மற்றும் சமமான நிறுவனம் சார் ஏற்பாடுகளினது பிரதிநிதித்துவம் ஊடாக கைத்தொழில், வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் அரசாங்கத்துடன் முறையான தொடர்புகளை பேணி வருகின்றது. கற்கைநெறிகளின் கோட்பாட்டு ரீதியிலான கல்வி நடவடிக்கைகளிலும் ஆராய்ச்சித் துறையிலும் மாணவர்களுக்கு பல்வேறு விருதுகள் காணப்படுகின்றன. இவற்றில் சில நன்கொடைகளாகவும் நிறுவகத்திற்கு வழங்கப்பட்ட நல்ல அன்பளிப்புகளாகவும் உள்ளன.

கொள்கை ரீதியாக நடைமுறைசார் முகாமைத்துவ பிரச்சினைகளை வெளிப்படுத்துவதனூடாக, பீட கற்பித்தலின் உள்ளடக்கத்தையும் தேர்ச்சியையும் மேம்படுத்துவதை நோக்கி பங்களிப்பு செய்கின்ற முகாமைத்துவ உசாவுகை பணிகளை பொறுப்பேற்கின்றது. கடந்த காலத்தில் அத்தகைய கூட்டாண்மை திட்டமிடல் நிறுவனசார் கட்டமைப்பு, தொழில் பகுப்பாய்வு, ஓய்வூதியக் கொள்கை, பயிற்சி அபிவிருத்தி, நிறுவனம் சார் அபிவிருத்தி போன்ற துறைகளில் பல முகாமைத்துவ உசாவுகை சேவைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளது. இதில் வாடிக்கையாளர்களாக உற்பத்தி சேவை வழங்கல், வங்கி, நிதி, காப்புறுதி, நகர அபிவிருத்தி போன்றவைகளிலும் விஷேட சேவைகள், சமூகத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை நோக்கமாகக் கொண்ட விசேட சேவைகளில் ஈடுபட்டுள்ள தனியார் மற்றும் அரசு துறைசார் இரு வகையான வாடிக்கையாளர்களையும் உள்ளடக்குகின்றது.

PIM UNSW பங்காண்மை

PIM-UNSW நிவ்சவுத்வேல்ஸ் பலகைலைக்கழக பங்காண்மை உடன்படிக்கையின் கீழ், இவ்வாண்டுக் காலப் பகுதியில் நிறுவகத்திடம் குறிப்படத்தக்க அளவில் உதவி கிடைத்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அ) இணைந்த ஆராய்ச்சி கருத்திட்டத்தினூடாக மு.ப.நிறுவனத்தினதும் தத்துவியல் முதுமாணி மாணவர்களின் கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆற்றல்களை விருத்தி செய்தல்.

ஆ) ஆராய்ச்சியில் அதி திறமையாக செயல்பட்ட முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் வியாபார நிருவாக பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்கான தத்துவியல் முதுமாணி பட்டப்படிப்பு புலமைப்பரிசில் வழங்கல்

இவ்வாண்டுக் காலப்பகுதியில் இரண்டு நிறுவனங்களுக்குமிடையிலான இணைப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது.

வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் உடனான பங்காண்மைகள்

நாட்டிலுள்ள பொதுத் துறை அலுவலர்களில் தெரிவுசெய்யப்பட்ட குழுக்களுக்கு சர்வதேச ரீதியில் முகாமைத்துவத்தில் பயிற்சியை வழங்கும் நோக்கத்திற்காக பின்வரும் பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

- கெசட்சாட் பல்கலைக்கழகம், தாய்லாந்து (Kasetsart)
- மாஸ்ட்ரிச் பல்கலைக்கழகம், நெதர்லாந்து (Maastricht)
- பிராங்பேட் பல்கலைக்கழகம், ஜேர்மனி (Frankfurt)
- கஜமதா பல்கலைக்கழகம், இந்தோனிஷியா (Gadamada)
- ஹொங்கொங் பல்கலைக்கழகம், ஹொங்கொங்
- சர்வதேச பல்கலைக்கழகம், ஜப்பான்
- சிட்னி பல்கலைக்கழகம், ஆஸ்த்ரேலியா

உலகளாவிய மட்டத்தில் நிலவும் தொற்றுநோய் நிலைமை காரணமாக, 2021 ஆம் ஆண்டுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் 2022 ஆம் ஆண்டு வரை ஒத்திவைக்கப்பட்டது.

இராணி எலிசபத் பொது நலவாய புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டம்

பொது நலவாய குறைந்த அல்லது நடுத்தர வருமானமுடைய ஒரு நாட்டில், இரண்டு ஆண்டுகளிலான பட்டநிலை பின்படிப்பு கற்கைக்காக பொது நலவாய புலமைப் பரிசில் (CSFP) மற்றும் அங்கத்தவர் திட்டத்தினால் நிதியளிக்கப்படுகின்ற இராணி எலிசபத் பொது நலவாய புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம் மூலம் (QECS) முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில், வியாபார நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இராணி எலிசபத் பொது நலவாய புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம் (QECS) மூலம் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் வியாபார நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டத்தின் கற்கைநெறி பொருட்டு தற்போது 7 புலமைப் பரிசீல்கள் அளிக்கப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டில் பொது நலவாய புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம் (QECS) கம்பியாவில் மாணவர் ஒருவருக்கு முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு கற்கைநெறி கற்பதற்காக புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு நிறுவனங்களுடன் பங்காண்மை

ஆண்டில் நிறுவனங்கள்மூலம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அலுவலர்களுக்காக சிறப்பு பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகளை நடாத்தப்படுதலின் ஊடாக, உள்நாட்டு வருமான திணைக்களம், இலங்கை சுங்கம் மற்றும் கல்வி திணைக்களத்துடன் தனது உறவுகளை வலுப்படுத்திக்கொண்டது.

நிறைவேற்று அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

வியாபார சமூகத்துடன் பணியாற்றும் பங்காளராக, நிறுவனங்களில் ஊழியர்களுக்கான வாடிக்கையாளர் மையப்படுத்திய பயிற்சியையும் வழங்குவதில் பெருமையடைகின்றது. நிறுவகத்தின் நிறைவேற்று அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அதன் கூட்டாண்மை பங்காளர்களுக்கு பாரிய நீண்டகால பெறுமானங்களை பெற்றுக் கொடுக்கிறது. நிறுவனத்தின் இலக்கு யாதெனில், நிறுவனம் சார்பில் பல்வேறு மட்டங்களில் உள்ள வேறுபட்ட துறைகளைச் சார்ந்த நிறைவேற்று அலுவலர்களுக்கு தொடர்புடைய பயிற்சி மற்றும் அபிவிருத்தியை வழங்குவதனூடாக நிறுவனசார் முகாமைத்துவ முறைமைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு உதவுவதாகும். பங்கேற்பாளர்கள் அதிநவீன கருவிகள், உத்திகள் மற்றும் வேறுபட்ட முகாமைத்துவ துறைகளை சார்ந்த திறன்களுடன் வளப்படுத்தப்படுகின்றனர். 10 நிறைவேற்று முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை இவ்வாண்டுக் காலப்பகுதியில் நிறுவகத்தின் கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்காக வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளது.

ஆண்டுக்கான அடைவுகள் (பங்காண்மை)

1. UNSW பல்கலைக்கழகத்துடன் இணைந்து கூட்டு ஆராய்ச்சி கருத்திட்டங்களில் தொடர்புபட்டு PIM கல்விசார் பணியாற்றொகுதியினரதும் கலாநிதி பட்டப்படிப்பு மாணவர்களதும் கல்வி மற்றும் ஆராய்ச்சி திறன்களை மேம்படுத்தல்.
2. நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுக்கான நிறைவேற்று அபிவிருத்தி கற்கைநெறிகள் 10 ஐ நடாத்தல்
3. பொது நலவாய மாணவர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாணவர் ஒருவருக்கு MBA பட்டப்படிப்பு கற்பதற்கான வாய்ப்பு வழங்குதல்
4. சிரேட்ட முகாமையாளர்களுக்கான Globus Simulation விசேட நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டு நிறைவேற்று அபிவிருத்தி கற்கைநெறிகளின் தரதினையும் அளவினையும் அதிகரித்தல்
5. அவுஸ்த்ரேலியாவில் UNSW மற்றும் ANU பல்கலைக்கழகங்களுடன் கலாநிதி பட்டப்படிப்புடன் தொடர்புடைய உறவுகளை விருத்தி செய்தல்.
6. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களுக்கு வியாபார நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டங்கள் தொடர்பாக 02 புலமைப் பரிசில்களை வழங்குதல்
7. கல்வி அமைச்சுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடல்.

நிலைபேறான தன்மை

நாட்டின் முகாமைத்துவ கல்வியில் முதன்மை நிறுவனமான முகாமைத்துவ பட்டப்படிப்பு நிறுவகமானது, நாட்டிற்கான அதன் அர்ப்பணிப்பு கடப்பாட்டில் முழுமையான முனைப்புடன் உள்ளது. அதனால் முகாமைத்துவ விடயங்களில் அதன் நோக்கில் எதிர்கால பார்வை கொண்டதாகவே உள்ளது. முகாமைத்துவ பட்டப்பினபடிப்பு நிறுவகம் கீர்த்தியின் ஐந்து தூண்களில் ஒன்றாக நிலைபேறான தன்மை கீர்த்தியின் முக்கிய தன்மையாக உள்ளடக்குகின்றது.

நிலைபேறான தன்மை, பின்வரும் உபாய முறைகளின் ஊடாக நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

(i) சுற்றாடலுக்கு தற்போதும் எதிர்காலத்திலும் பாதிப்பு ஏற்படாத வகையில் நிறுவகத்தின் அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) சூழல் சமநிலையை பேணும் வகையில் சுற்றாடலையும் அதன் வளங்களையும் உச்ச அளவில் பேணி இயற்கை மூலவளங்களின் சிதைவை தவிர்த்து தரமான வாழ்க்கைக்கான நிர்வாக முறைமையொன்றை உருவாக்குதல்.

(iii) மாணவர் சமூகம் உள்ளிட்ட பங்குதாரர்களில் உள்ளத்தில் நிலைபேறான தன்மை கோட்பாட்டை கட்டியெழுப்புதல்

(iv) பீடம் மற்றும் வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு கற்கைநெறி பொருட்டு மாணவர்களால் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பதவியணி நலனோம்பல் சங்கத்தால் அமுல்படுத்திய நிறுவனஞ்சார் சமூக பொறுப்பு கருத்திட்டங்கள் ஊடாக நிலைபேறு தன்மையை மேம்படுத்தல்.

(V) முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தில் 5S முறைமையின் ஊடாக பசுமையான, எளிமையான, சுத்தமான பணி சூழல் ஒன்றை மேம்படுத்தல்.

(v) அனைத்து உள்ளக தொடர்பாடல் அனுமதிகள், ஒப்படைகள் மற்றும் இறுதி கருத்திட்டங்கள் என்பவற்றுக்கான இலத்திரணியல் ஆவணங்களின் உச்சபட்ச பாவனையினால் கடுதாசி பாவனையை பதிலீடு செய்தலும் கம்பியற்ற வலைப்பின்னல் (wireless network) முறைமைகளை பின்பற்றுதலும்.

நிறுவன சமூக பொறுப்புகள் (CSR) கருத்திட்டங்கள்: பாடசாலை விளைத்திறனை மேம்படுத்தல் மற்றும் சுற்றாடல், பிரதேச சமூகங்களுடன் பாடசாலைகளில் தொடர்புகளை ஏற்படுத்தல்.

இலங்கை இப்போது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) மீது கவனம் செலுத்தியுள்ளதுடன், எதிர்வரும் பதினைந்து ஆண்டுகளில் அவர்கள் புவியைப் பாதுகாத்துக்கொண்டு வாழ்க்கையை மேம்படுத்துவது எவ்வாறு என்பதில் கவனம் செலுத்துகிறது. நிலையான வளர்ச்சிக் கொள்கைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம், உள்ளூராட்சி நிறுவனங்கள், சமூகத்துடன் கூட்டு சேர்ந்து குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தலாம் என்பதுடன், உலகளாவிய சுற்றாடலையும் பாதுகாக்கலாம். முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தால் நிலையான அபிவிருத்தி இலக்குகளின் பொருட்டு ஒத்துழைப்பு வழங்கும் கருத்திட்டங்களைத் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கருத்திட்டங்கள் மூலம் நிலையான அபிவிருத்தி இலக்குகள் 1 மற்றும் 3 என்பன விளிக்கப்பட்டுள்ளது. இலக்கு 1 மீது கவனம் செலுத்தப்பட்டு, முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம்மூலம் பாடசாலை, பன்சலை மற்றும் சமூகம் ஆகிய மூன்று துறைகளையும் இணைப்பதன் ஊடாக சமூக அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கருத்திட்டங்களின் இடம், பரைகம: இந்த சமூகம் பரைகம, மேமா/மத்து/பரைகம மகா வித்தியாலயத்துடன் தொடர்பு கொண்டுள்ளதுடன், பரைகம பிரதேசத்தில் 70% இற்கு அதிகமான மக்கள் சமுர்த்தி நலன் பெறுநர்களாவார்கள். பெரும்பாலானோர் அன்றாட உழைப்புகளைக் கொண்டு வாழகின்றார்கள். இலக்கு 3 மீது கவனம் செலுத்தப்பட்டு பாடசாலை விளைத்திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தியதுடன், சுகாதார வாழக்கை முறையினை உறுதிப்படுத்தல் மற்றும் அனைத்து வயது குழுக்களினதும் நல்லிருப்பை மேம்படுத்தவதற்காக சிறந்த சுகாதாரம் மற்றும் நல்லிருப்பை விருத்தி

செய்வதற்கு உதவுவதுடன் கிராமிய பாடசாலைகளில் விளைத்திறனை மேம்படுத்துவதன் மீது முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பாடசாலை, பன்சலை மற்றும் சமூகம் என்பன இணைப்பதன் ஊடாக சமூக அபிவிருத்தி தொடர்பான கருத்திட்டங்களை அமுல்படுத்தப்பட்டது. குறித்த விளைவு காரணியுடன் தொடர்புபடும் சமூகத்தின் வறுமை, ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு என்பன தீர்வுகளை வழங்குவதற்கு மேற்கொள்கின்ற முயற்சியாகும். இந்தக் கருத்திட்டம் 2018 தொடக்கம் 2021 ஆண்டு வரை 03 ஆண்டுகள் முழுவதும் சனத்தொகையில் 70% இற்கு அதிகமான சனத்தொகை நிலையான நிரந்தர வருமானம் இல்லாத வறுமையுடன் கூடிய சமுர்த்தி பயனாளிகள் அதிகமாக வாழ்கின்ற பரைகம என்ற கஷ்டமான பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தக் காலப்பகுதிக்குள் 19 குடும்பங்களினது வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டதுடன், அவர்கள் தற்போது எந்தவொரு உதவிகளுமின்றி வாழ்வதற்கு இயன்றுள்ளது. இதற்கு மேலதிகமாக சுகாதார முகாம்கள் மற்றும் பன்சலையுடன் தொடர்புகொள்ளுதல், அறநெறி பாடசாலைகளின் மேம்பாடு. சேதனைப் பசளை உற்பத்தி போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளில் பல நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக சமுக சுகாதார நல்லிருப்பை மேம்படுத்தப்பட்டுள்ளது.

பாடசாலை விளைத்திறனை மேம்படுத்தும் கருத்திட்டம் தேசிய விளைவுத்திறன் செயலகத்தின் (NPS) வழிகாட்டலை அடிப்படையாகக்கொண்டு தெரிவு செய்த பாடசாலைகளில் விளைவுத்திறன் அதிகரிக்கப்படுகிறது. இந்த நலன் பொருட்டு தகைமைகளைப் பெறுவதற்கு 40% இற்கு அதிகமான சமுர்த்தி பயனுகரிகள் வாழ்கின்ற கிராமத்தில் பாடசாலை அமைந்திருத்தல் வேண்டுமென்பதுடன், கல்வி அமைச்சினால் கஷ்டமான பிரதேசமாக வகைப்படுத்தியிருத்தல் தகைமைகளைப் பெறுவதற்கு மேலும் ஒரு தகைமையாகும். பிரதான நோக்கம் யாதெனில் பாடசாலை ஒன்றில் விளைவுத்திறனை அதிகரித்தல் மற்றும் தெரிவு செய்த பாடசாலைகளில் பிள்ளைகளின் சுகாதாரம் மற்றும் நல்லிருப்பை மேம்படுத்தலுக்கு உதவுவதாகும்.

2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை விளைவுத்திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தில் தற்போது 8 கருத்திட்டங்களை முடிவுறுத்தியுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் 184 மாணவர்களைக் கொண்டுள்ள 08 ஆசிரியர்களிலான மத்துகம, யக்குபிட்டிய மேமா/மத்/ஸ்ரீ சந்திரவிமல ஆரம்ப கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தரச் சான்றிதழ் மற்றும் அங்கீகரிப்புக்கான நிலையம் (CQAA)

தற்போது இலங்கையின் பல்கலைக்கழக முறைமையில் தரச் சான்றுப்படுத்தலுக்காக மிக உயர் மட்டத்திலான முதன்மை வழங்கப்பட்டுள்ளது. எல்லா பல்கலைக்கழகங்களும் உயர் கல்வி நிறுவனங்களில் உயர் மட்டத்திலான செயற்பாடுகளுடன்கூடிய உள்ளக தரச் சான்றுப்படுத்தல் முறைமைகளை தாபித்தல் கட்டாயமாகும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ள வகையில் உள்ளக தரச் சான்றுப்படுத்தல் செயற்பாடுகளை திட்டமிடல், அபிவிருத்தி செய்தல், வசதிகளை அளித்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்காக தரச் சான்றுப்படுத்தல் மற்றும் அங்கீகரிக்கப்படுதலுக்கான நிலையம் (CQAA) 2021 யூலை மாதத்தில் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் தாபிக்கப்பட்டது. முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தால் வழங்கப்படும் கற்கைநெறிகளை கற்பதற்காக ஏற்றுக்கொள்ளுதலை மேம்படுத்தல் மற்றும் அங்கீகரித்தலை பெற்றுக்கொள்வதற்காக உள்நாட்டு மற்றும் சர்வதேச அங்கீகரிப்பு நிறுவனங்களுடன் நடவடிக்கை மேற்கொள்வதற்கு இந்த நிலையம் பொறுப்பு கூறுதல் வேண்டும்.

தரச் சான்றுப்படுத்தல் மற்றும் அங்கீகரிப்பதற்கான நிலையம் (CQAA) முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் உள்ள எல்லா தரச் சான்றுப்படுத்தல் செயற்பாடுகளையும் ஒருங்கிணைக்கப்படுவதுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தரச் சான்றுப்படுத்தல் சபையின் தரச் சான்றுப்படுத்தல் சபை (QAC) மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தரச் சான்றுப்படுத்தல் நிலையத்துடனும், (CQA) சர்வதேச அங்கீகரித்தல் நிறுவனங்களுடனும் தொடர்புபட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. மேலும் தரச்

சான்றுப்படுத்தல் மற்றும் அங்கீகரித்தலுக்கான நிலையம் (CQAA) மூலம் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் எல்லா பதவியணி உறுப்பினர்களுக்கும் தரச் சான்றுப்படுத்தல் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குகின்றது. முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் தரச் சான்றுப்படுத்தல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தலை மேற்பார்வை செய்கின்றது. பதவியணியின் உறுப்பினர்களுக்கிடையில் சிறந்த பயன்பாடுகளை பகிர்ந்துகொள்வதற்கு வசதிகளை அளிப்பதுடன், தரச் சான்றுப்படுத்தலுக்கான கொள்கைகள், வழிகாட்டல்கள் மற்றும் கையேடுகள் என்பன தயாரிக்கப்படுகின்றன.

தரச் சான்றிதழ்படுத்தல் மற்றும் அங்கீகரிப்பு நிலையத்தின் (CQAA) நோக்கங்கள் பின்வருமாறாகும்:

- முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் தரத்தினை அதிகரிக்கும் செய்றபாடுகளின் மேம்பாடு;
- முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் வெளியக (peer review) நடாத்துகையில் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) தரச் சான்றிதழ் சபையுடன் (QAC) தொடர்பு கொள்வதற்கு;
- வெளியக peer review இற்காக முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கல்வி மற்றும் நிருவாக பணித்தொகுதியுடன் ஒத்துழைப்புடன் சுயமதிப்பீட்டு அறிக்கைகளை தயாரித்தல்;
- இலங்கை தகைமைகள் சட்டகம் பிரகாரம் (SLQF) கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தினை மேம்படுத்துவதற்காக முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பணியாற்தொகுதி உறுப்பினர்களுக்கு வழிகாட்டுதல்;
- வெளியக தரச் சான்றிதழ் மீளாய்வுகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ள பின்னாய்வு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை அளித்தல் மற்றும் அவற்றை செயற்படுத்தும் முன்னேற்றம் அவதானித்தல்; மற்றும்
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தரச் சான்றுப்படுத்தும் நிலையம் (CQA) மற்றும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களில் தரச் சான்றுப்படுத்தல் நிலையங்களுடன் தொடர்புகொண்டு இலங்கையின் உயர் கல்வியில் தரத்தினை அதிகரித்தல் மற்றும் நற்பயன்பாடுகளை பகிர்ந்துக்கொள்ளுதல்.

தரச் சான்றுபடுத்தல் மற்றும் அங்கீகரிப்பு குழுவின் தொழில்பாட்டு குழு எதுவெனில், 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் தாபிக்கப்பட்ட தரச் சான்றிதழ் மற்றும் அங்கீகரிப்பு நிலையம் (QAAC) ஆவதுடன், தரச் சான்றிதழ் மற்றும் அங்கீகரிப்பு குழுவின் (QAAC) தலைவர் (Chairman) , முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர், நிகழ்ச்சித்திட்டங்களின் ஒருங்கிணைப்பாளர்கள், பிரதி நிதியியாளர் சிரேட்ட உதவி பதிவாளர்கள், சிரேட்ட முகாமையாளர்கள் / தகவல் தொழில்நுட்பவியலாளர்கள், உதவி நூலகவியலாளர்கள் (செயலாளர்கள்) ஆகியோர்களை கொண்டமைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் இந்தக் குழுவால் தரத்தின் பிரச்சினைகளுடன் கூடிய நிலைமைகளை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றுக்கான பணிகளை பரிந்துரைச் செய்தல், நற்பயன்பாடுகளை அடையாளம் காணுதல் அவற்றை நிறுவனத்தில் மேம்படுத்தல் மற்றும் நிறுவனத்தில் தரச் சான்றுப்படுத்தல் செயற்பாடுகளில் முன்னேற்றம் மேற்பார்வை செய்தல் என்பவற்றுக்காக 05 கூட்ட அமர்வுகள் நடாத்தப்பட்டன.

2021 ஆம் ஆண்டில் தரச்சான்றுப்படுத்தல் மற்றும் அங்கீகார நிலையத்தால் (CQAA) மேற்கொண்ட செயற்பாடுகள் பின்வருமாறாகும்.

1. கொள்கைகளை அபிவிருத்தி செய்தல்

பின்வரும் 10 கொள்கைகளை அபிவிருத்தி செய்யப்பட்டதுடன், பீடங்களுடன் கலந்துரையாடப்பட்டு அனுமதி பொருட்டு முகாமைத்துவ சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

i. கொள்கை இலக்கம் 1: மாணவர்களின் குற்றங்குறைகளை கையாளும் கொள்கை
ii. கொள்கை இலக்கம் 2: தகவல் தொழில்நுட்ப கொள்கை
iii. கொள்கை இலக்கம் 3: நூலக கொள்கை
iv. கொள்கை இலக்கம் 4: பாடவிதானங்களின் அபவிருத்தி மற்றும் மீளாய்வு கொள்கை
v. கொள்கை இலக்கம் 5: பாடவிதானங்களை அங்கீகரித்தல் மற்றும் கட்டங்களாக அகற்றல் கொள்கை
vi. கொள்கை இலக்கம் 6: கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பிடல் கொள்கை
vii. கொள்கை இலக்கம் 7: தரச் சான்றுப்படுத்தல் கொள்கை
viii. கொள்கை இலக்கம் 8: மனித வளங்களின் அபிவிருத்தி கொள்கை
ix. கொள்கை இலக்கம் 9: பெண் ஆண் சமூகத்தன்மையின் நியாயம் மற்றும் சமத்துவக் கொள்கை
x. கொள்கை இலக்கம் 10: Plagiarismதொடர்பான கொள்கை

2. தரச் சான்றுப்படுத்தல் தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பதவியினறுக்காக தரச் சான்றுப்படுத்தல் தொடர்பாக பின்வரும் அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

i. உயர் கல்வியின் தரச்சான்றுப்படுத்தல்
ii. இலங்கை தகைமைகளின் சட்டம்
iii. நிகழ்ச்சித்திட்டங்களின் முகாமைத்துவம் மற்றும் பயன்பாடுகள்
iv. நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுகையில் நற்பயன்பாடுகள்

3. இலங்கையில் தகைமை சட்டகம் மற்றும் இசைவிணக்கத்தை சான்றுப்படுத்தல்

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தால் வழங்கப்படும் வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டங்கள், வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டங்கள் (சுங்கம் மற்றும் வியாபாரம்) மற்றும் அரசாங்க நிருவாக பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகளின் கற்கை பெறுபேறுகள் இலங்கை தகைமைகளின் சட்டகத்தின் படி 10 ஆவது மட்டத்தின் தகைமைபெறுநர்களின் எதிர்பார்க்கப்படும் உபஅம்சங்களுக்கு சமமாகும் வகையில் திருத்தம் செய்யப்பட்டது.

இலங்கை தகைமைகளின் சட்டகத்தில் காட்டப்பட்டுள்ளவாறு தேசிய வகையில் முக்கியமான கற்கை பெறுபேறுகளுடன் கற்கைநெறிகளில் எதிர்பார்க்கப்படும் கற்கை பெறுபேறுகளை வரைப்படமாக்கும் வகையினை காண்பிப்பதற்காக கற்கைநெறிகளில் படிவம் திருத்தம் செய்யப்பட்டது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கற்கை போர்ட்டலான பிரக்ஞாவில் பதிவேற்றுவதற்கு முன் பாடத்திட்டக் குறிப்புகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டன.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கற்கை போர்ட்டலான ப்ரக்ஞாவில் பதிவேற்றுவதற்கு முன்னர் கற்கைநெறிகள் தொடர்பான குறிப்புகளை தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டது.

4. நடத்தை வழிகாட்டல் மற்றும் நெறிமுறை கோவை தயாரித்தல்

ஆராய்ச்சி மேற்பார்வையாளர்களுக்காக நடத்தை தொடர்பான வழிகாட்டல் தரச்சான்றுப்படுத்தலை, அங்கீகரிப்பு நிலையத்தால் தாயரிக்கப்பட்டுள்ளதுடன் அனுமதிக்காக முகாமைத்துவ சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாணவர் நெறிமுறை கோவை தயாரித்து அனுமதிக்காக முகாமைத்துவ சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

5. தரச் சான்றுப்படுத்தலுக்கான பங்களிப்பை மேம்படுத்தல்

தரச் சான்றுப்படுத்தலுக்கான பங்களிப்பு அதிகரிப்பதற்காக ஆராய்ச்சி நிலையத்தின் ஒருங்கிணைப்பாளரது கடமைகளை திருத்தம் செய்யப்பட்டது.

பின்வரும் சிரேட்ட முகாமையாளர்களின் தொழில் விபரங்கள் தரப்படுத்தலுக்காக அவர்களின் பங்களிப்பு மேம்படுத்தும் பொருட்டு திருத்தம் செய்யப்பட்டது.

i. சிரேட்ட முகாமையாளர்கள்/தகவல் தொழில்நுட்பம்

ii சிரேட்ட முகாமையாளர் / வெளியிடல்கள்

iii. சிரேட்ட முகாமையாளர்கள் / சர்வதேச நிகழ்ச்சித்திட்டங்கள்

iv. சிரேட்ட முகாமையாளர்கள் / சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

கற்பித்தல் தரத்தினை மேம்படுத்துவதற்காக நிறுவனத்தின் டிஜிரல் களஞ்சியம் (Digital Repository) அபிவிருத்தி செய்வதற்காக வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தரச் சான்றுப்படுத்தல் செயற்பாடுகளுடன் மாணவர்கள் மற்றும் ஏனைய தரப்புகளினது பங்களிப்பு அதிகரிக்கும் நோக்கில் தரச் சான்றுப்படுத்தல் இணையப் பக்கம் அபிவிருத்தி செய்வதற்கு வழிகாட்டல் வழங்கப்பட்டது.

தரச் சான்றுப்படுத்தலின் மூலோபாய திட்டம் 2022-2025 அபிவிருத்தி செய்தல்

பின்வரும் இலக்குகளுடன் 2022-2025 இற்காக தரச் சான்றுப்படுத்தல் மூலோபாய திட்டம் தயாரிக்கப்பட்டது. இது தொடர்பாக பீடத்துடன் கலந்துரையாடப்பட்டு அவர்களின் பரிந்துரை அனுமதிக்காக முகாமைத்துவ சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இலக்கு 1: கற்கை பாடநெறிகள் முகாமைத்துவம் மேம்படுத்தல்

இலக்கு 2: பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகளை திட்டமிடல் மற்றும் அபிவிருத்திச் செய்தலை வலுவூட்டல்

இலக்கு 3: கற்ப்பவர்களின் பொருட்டு வழங்கும் ஒத்துழைப்பு மற்றும் மனித வளங்களின் தரம் மேம்படுத்தப்படுதல்

இலக்கு 4: கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பிடல் செயற்பாட்டு திட்டங்களில் பண்புசார் தன்மை மேம்படுத்தல்

இலக்கு 5: கல்வி மற்றும் ஒத்துழைப்பு செய்றபாடுகளில் ஆரோக்கியமான முறைகளை மேம்படுத்தல்

தரச் சான்றுப்படுத்தல் செயற்றிட்டம் 2022 அபிவிருத்தி செய்தல்


2022 -2025 இற்காக தரச் சான்றுப்படுத்தல் செயற்றிட்டம் தயாரித்து, பீடத்துடன் கலந்துரையாடப்பட்டு அனுமதிக்காக முகாமைத்துவ சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் 5S செயற்பாடுகள்

பௌதீக பின்னணி – எல்லைகள்

2020-2021 இரண்டு ஆண்டு காலப்பகுதியில் பிரதானமாக கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக பல்வேறு நிறுவனங்கள் அனுபவிக்கின்ற இடையூறுகள், தடைகள் மற்றும் மட்டுப்படுத்தல்கள் முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தாலும் அனுபவிக்கப்பட்டது. புதிய கட்டிடத் தொகுதியை நிருமாணிக்கும்போது திட்டமிடப்பட்ட காலப்பகுதியிலிருந்து விலகியதன் காணரமாக தாமதம் ஏற்பட்டதுடன், தூசு மற்றும் முறையின்மை சுற்றாடலின் நிறுவன நடவடிக்கைகளின் மீது மேலும் தடைகளை ஏற்படுத்தியது. ஆகையால் முகாமைத்துவ பட்டப்பின் படிப்ப நிறுவனத்தின் 5S செயற்பாடுகள் பிரதானமாக வேலை அலகுகளில் 5S அடிப்படை விடயங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டு மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

5S கோட்பாடு



5S கொள்கை

1. முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் சூழலை, மனம்கவரும் வகையிலும், முறையான வகையிலும், பயனுள்ள வகையிலும் உருவாக்குவதற்கு ஒழுக்காற்று, பாதுகாப்பு மற்றும் சிறந்த சுகாதார மேம்பாடுகள் என்பவற்றுக்கு அர்ப்பணிப்புடன் நாம் செயலாற்றியதுடன். எல்லா மட்டத்திலுமான ஊழியர்களினது தொடர்ச்சியானதும் அர்ப்பணிப்புடன் கூடியதுமான பங்களிப்பு போன்று 5S எண்ணக்கருவிற்கு ஊக்கத்துடன் ஒழுங்கமைவதுடன் ஊடாக சிறந்த நிறுவன புகழுருவை கட்டியெழுப்புவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றோம். அதேபோன்று எமது நிறுவனக் கலாச்சாரம் வரை விருத்தி செய்யப்பட்டுள்ள 5S பயன்பாடுகளுக்கு ஊக்கத்துடன் ஒழுங்கமைகின்றோம்.

இலக்குகள்

1. அலுவலக கட்டிடத்தில் அனைத்து பகுதிகளும் வளாகங்களும் தூய்மையாகவும் நட்புடையதாகவும் சுத்தமான மற்றும் பாதுகாப்பானதாகவும் ஆரோக்கிய நிலைமைகளுடன் இருக்கின்றன.
2. ஊழியர்கள் வழமையாகவும் உற்சாகத்துடனும் 5s செயற்பாடுகளில் பங்கேற்கின்றனர்.
3. ஊழியர்கள் தனது பணிகளை சந்தோஷமான ஆரோக்கியமான வேலைச் சூழலில் பெருமிதத்துடன் மேற்கொள்கின்றனர்.
4. மூல வளங்களினதும் சூழலினதும் கவனமான பயன்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

5S நோக்கங்கள்

1. அனைத்து மட்டங்களிலும் ஊழியர்களிடையே விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் ஒழுங்குமுறை மற்றும் ஒழுக்கம் என்பவை தொடர்பாக சாதகமான மனோபாவங்களை உருவாக்குதல்.
2. முழுதுமளாவிய வினைத்திறனை மேம்படுத்தல்.
3. தொழில்பாட்டு மூலவளங்களின் நுகர்வை குறைத்தல்
4. சூழலை பாதுகாத்து வலுசக்தியை சேமித்தல்
5. மு.ப.நி ஐந்து வகை தூண்களின் நோக்கங்களை அடைவதற்கு பாதுகாப்பான, சுத்தமான, நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் சுமுகமான வேலைத்தளத்தை கொண்டிருத்தல்
6. ஊழியர்களின் பங்கேற்பை மேம்படுத்தல், கூட்டாண்மை, ஒற்றுமை மற்றும் குழுப் பணியை ஊக்குவித்தல்
7. நிறுவகத்தின் தொழில்பாட்டின் பிரிக்க முடியாத அங்கமொன்றாக 5ள செயற்பாடுகளை கருதுதல்
8. சிறந்த கூட்டாண்மை புகழுருவை உருவாக்குதல்

2021 ஆம் ஆண்டில் மேற்கொண்ட 5S சிறப்பு செயற்பாடுகள்

2021 ஆம் ஆண்டில் மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள பௌதீக பின்னணியைக் கவனத்தில் கொண்டு 2021 ஆம் ஆண்டில் பின்வரும் 5S சார்ந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

1. துப்பரவேற்பாட்டு மற்றும் பராமரிப்பு பதவியினரை அறிவுறுத்தல், பாதுகாப்பு அவதானிப்புகளை வலுப்படுத்தலின் மூலம் பாதுகாப்பு மற்றும் சுகாதார நடவடிக்கைகளின் பொருட்டு முன்னுரிமை வழங்குதல்.
2. சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டலுக்கு அமைவாக சிறப்பு/மேலதிக சுகாதார செயற்பாடுகளை அறிமுகப்படுத்தல்

    I. கைகழுவும் வசதிகளை தாபித்தல்
    II. போதனா மண்டபங்களை அவ்வப்போது கிருமிநீக்கம் செய்தல்
    III. கட்டிடத்தின் முக்கியமான இடங்களில் கிருமி நீக்கப் பயன்பாடுகளை .தாபித்தல்
    IV. பதவியணிக்காக அவ்வப்போது முகக்கவசம் வழங்குதல்
    V. பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு பதவியணி கவனமாக இருக்குமாறு அறிவுறுத்தல

3. 5S அமைப்புகளின் கட்டமைவு முறையை அறிமுகப்படுத்தல் - 2021 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் நடைமுறைப்படுவதுடன், முக்கயிமான 5S செயற்பாடுகள் செயற் குழுக்களின் கீழ் வைக்கப்படும். (கோவிட் - 19 தொற்றுநோய் காரணமாக நீண்ட நாட்களிலான மூடிவைத்தலின் பின்னர் வளாகத்தை திறந்து வைக்கப்பட்டதன் பின்னர்)
4. முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பத்திரிக்கை கடித இலக்கம் 01/2021 வெளியிடல்.
5. வேலை சூழல் தூசு அற்றதாகவும் பிரச்சினைகள் இன்றியும் மேற்கொள்வதற்கு 2021 ஆகஸ்ட் 06 ஆம் திகதி BIG SEIRI தினம் கொண்டாடுதல்.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் வியாபார இனிகியுபேடர்"Genesis"

2021**ஆம் ஆண்டில் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் வியாபார இனிகியுபேடர் "Genesis" மூலம் மேற்கொண்ட பணிகள்**

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (PIM) விரிவானதொரு எல்லைக்குள் தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குவதை நோக்கமாகக்கொண்டதுடன், அதன் வியாபார இனிகியுபேடர் "Genesis" அடிப்படையில் தாபிக்கப்பட்டது எதற்காகவெனில், இறுதி கருத்திட்டமாக தொழில்முயற்சி ஆற்றல் ஆராய்ச்சி கருத்திட்டம் ஊடாக வியாபாரம் ஆரம்பிக்கும் மாற்று நடவடிக்கை பின்பற்றும், நிறுவனத்தின் வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்காக ஆகும். "Genesis" இன் முக்கியமான நோக்கம் யாதெனில், குறுகிய காலத்திற்கு நோக்கினால், அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குதல் மற்றும் தொழில்முயற்சிகளை கட்டியெழுப்புவதற்காக தொழில்முயற்சி கருத்திட்டங்களின் பொருட்டு அதிகளவில் மாணவர்களை பங்கேற்கச் செய்தலாவதுடன், நீண்ட காலமாக தேசத்தின் பொருளாதார விருத்தியில் பங்கு கொள்ளுதலாகும். "Genesis," ஆராய்ச்சிகளிலிருந்து தோன்றுகின்ற புத்தாக்கங்களை வனிகமயப்படுத்தல் நோக்கத்திற்காக அவர்களின் சிறப்புத்தன்மை ஊடாக அடிப்படை பரிசோதனைகளை மேற்கொள்கின்ற உள்நாட்டு பல்கலைக்கழகங்களுடன் (உதாரணமாக மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் உயிரியல் மருத்துவ புத்தாக்க நிலையம்) தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு பரிணமிக்கும் அவர்களின் மாதிரிகளின் கருத்திட்டங்களுக்காக ஒத்துழைப்பு வழங்குவதற்கு பல இன்கியுபேடர்களுடன் அது தொடர்புபட்டுள்ளது.

.



தொழில்முயற்சி ஆற்றல்களின் ஆய்வு (ESRP) கருத்திட்டத்தின் இறுதி கருத்திட்ட மாற்று நடவடிக்கையை, தெரிவு செய்துள்ள வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு மாணவர்களின் முன்னேற்றமத்தை மேற்பார்வை செய்தல்.

தொழில்முயற்சி ஆற்றல்களின் ஆய்வு (ESRP) கருத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களை தெரிவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு இறுதி கருத்திட்டங்களின் பாடவிதானத்தில் ஒரு பகுதியாவதுடன், உள்ளக கணக்காய்வு காலம் வரை 14 வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு மாணவர்களால் மேற்கொண்ட அவ்வாறான 12 கருத்திட்டங்களின் முன்னேற்றத்திற்காக "Genesis" 2021 ஆம் ஆண்டில் வழங்கல் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

தற்போது ஒப்பமிடப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையான LOLC கம்பெனியுடன் கூட்டாண்மையை ஏற்படுத்திக் கொள்வதன்மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் பொருட்டு தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் LOLC இல் நுண் தொழில்முயற்சியாளர்களை பயிற்றுவிக்கும் முதலாவது அமர்வு 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 03 ஆம் திகதி மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப 3.30 வரை ராஜகிரியவில் LOLC கேட்போர் கூடத்தில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அது 2022 சனவரி 27 ஆவது வியாழக்கிழமையில் மாற்றப்பட்டதற்கான காரணம், LOLC இல் சில பதவியணி உறுப்பினர்களுக்கு கோவிட் நோய் ஏற்படுதலாகும். பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளடக்கத்திற்கு சந்தையுடன் தொடர்புகளை கட்டியெழுப்புதல் மற்றும் வியாபார அபிவிருத்தி உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் 100% மகளிர் - சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் பங்குபற்றியதுடன், பங்குபற்றியவர்களின் பொருட்டு ஆற்றல் விருத்தி அனுபவம் வழங்கப்பட்டது. அவர்களில் பெரும்பாலானோருக்கு அவ்வாறான அனுபவம் கிடைக்கப்பெற்ற முதல் சந்தர்ப்பம் இதுவாக காணப்பட்டது. முழுமையான நிகழ்ச்சித்திட்டம் சிங்கள மொழிமூலம் நடாத்தப்பட்டது. கற்கைதொடரின் இரண்டாவது நிகழ்ச்சித்திட்டம் இலங்கையின் வடகிழக்கு பிரதேசத்தில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை அடிப்படையில் பெண்கள் வர்த்தக மற்றும் தொழில் சபை உறுப்பினர்களுக்கு ஆலோசனை

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் "Genesis" மூலம் 2020 ஆம் ஆண்டில் அவர்களின் உறுப்பினர்களான தொழில்முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஆலோசனைக்காக மகளிர் வர்த்தக மற்றும் கைத்தொழில் சபையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. தற்போது நான்கு உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதுடன், இந்த உடன்படிக்கையின்கீழ் உறுப்பினர்கள் குழுக்களின் பொருட்டு மூன்று செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. இதுவரை முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் "Genesis" மூலம் நுண் தொழில்முயற்சியாளர்கள் ஆறு பேர்களுக்கு அவர்களது வியாபாரங்களை முன்னேற்றுவதற்கு தனித்தனியாக ஆலோசனை வழங்கப்படுகிறது.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உயிரியல் மருத்துவ புத்தாக்க நிலையத்துடன் (CEBI) ஒத்துழைப்பு

2020 ஆம் ஆண்டு தொடக்கம் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் "Genesis" மூலம் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உயிரியல் மருத்துவ புத்தாக்க நிலையத்துடன் (CEBI) ஒத்துழைப்பை ஏற்படுத்திக்கொண்டு, அவர்களால் அபிவிருத்தி செய்யப்பட்ட முன்மாதிரிகளை வர்த்தகமயப்படுத்துவதற்கு அவர்களிடம் ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது. முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கலாநிதி ட்ரவிஸ் பெரேரா தற்போது CEBI இன் முனைப்பான குழுவில் உறுப்பினராவார். ஒத்துழைப்பு பொருட்டு நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு சப்பாத்தில் உட்பக்க அடிப்பகுதியை மேம்படுத்துவதற்கு திட்டமிடல் மற்றும் 2021 ஆம் ஆண்டு யூலை 30 ஆம் திகதி நடைபெற்ற இணையத்துடன் நேரடி தொடர்புடன் கூடிய கருத்தரங்கில் மருத்துவர் ட்ரவிஸ் பெரேரா அவர்களால் உயிரியல் மருத்துவர் புத்தாக்க நிலையத்தின் "ஹயிட்ரோஜெல் அடிப்படையாகக்கொண்ட பாதணிகளின் தீர்வுக்காக வியாபார கருத்தினை சரியாக பெற்றுக்கொள்ளுதல்" என்ற தலைப்பின்கீழ் முன்னிலைப்படுத்தல் உள்ளடக்கப்பட்டிருந்தது.

2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள பணிகள்

2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதிக்காக பின்வரும் விடயங்களின் பொருட்டு 2021 ஆம் ஆண்டில் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தொழில்முயற்சி – அபிவிருத்தி மற்றும் பிரயோக தொழில்நுட்ப ஆராய்ச்சிகளுக்கான நிலையம் தாபித்தல்.
- முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் சிறிய தொழில்முயற்சிகள் முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பு சான்றிதழ் கற்கைநெறிகளை ஆரம்பித்தல்.
- உயிரியல் மருத்துவ புத்தாக்க நிலையம் (CEBI) மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட முன்படிவங்களை வர்த்தகமயப்படுத்தலுக்காக மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் உயிரியல் மருத்துவ புத்தாக்க நிலையத்துடன் ஒத்துழைப்பை முறைசார்படுத்தல்.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் AACSB அங்கத்துவம்

“Association of Advance Collegiate of Business (AACSB)” அடுத்த சந்ததியினரின் சிரேட்ட தலைவரை உருவாக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய பொது இலக்கினை எய்துக்கொள்வதற்காக கல்வியியலாளர்கள், மாணவர்கள் மற்றும் வியாபாரங்களை தொடர்புபடுத்தப்படுகின்றது. AACSB 1600 உறுப்பினர் அமைப்புகளுக்கு மேலான எண்ணிக்கை மற்றும் உலகம் முழவதும் அங்கீகரிக்கப்பட்ட 800 இற்கும் அண்மித்த பாடசாலைகளுக்கு தரச் சான்றுப்படுத்தல், வியாபார கல்வி அறிவு மற்றும் தொழில்சார் அபிவிருத்தி சேவைகள் வழங்கப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டில் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்காக AACSB இல் உறுப்பினர் உரிமை வழங்கப்பட்டுள்ளதுடன், நிறுவனம் எதிர்காலத்தில் AACSB இடமிருந்து பாராட்டத்தக்க அங்கீகரிப்பு தரத்தினைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

அபிவிருத்திக்காக 5 M சட்டகம்

எதிர்வரும் ஆண்டுகளில் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பயணத்தின் முன்னேற்றத்திற்காக, தற்போது மேற்கொண்டிருந்த ஐந்து பரிமானங்கள் (five-dimensional programme), முன்பையும் பார்க்க வலுவாக முன்கொண்டுச் செல்லப்பட்டது. அதற்கு சந்தை (Market), உறுப்பினர்கள் (Members) (பீடம் மற்றும் பதவியணி), ஆலோசகர்கள் (Mentors) (தனித்தனியாக உதவி, வழிகாட்டல் மற்றும் பின்னூட்டல் வழங்குவதற்கு பீடம்மூலம் இணைக்கப்பட்டுள்ள), அவதானிப்பாளர்கள் (Monitors) (ஒவ்வொரு குழுவின் பொருட்டு வகுப்பு பிரதிநிதியாளர்கள் நியமனம் செய்தல்) மற்றும் வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள் ஆகியோரின் (MBA’s) (வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள் ஆகிய மாணவர்கள்) தொடர்ச்சியான பங்களிப்பு கிடைக்கப்பெற்றது. ஏனைய தரப்புகளின் பங்களிப்புடன் ஒழுங்கமைக்கப்பட்ட பீடத்தின் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களின் மூலம் இந்த தரப்புகளுடன் நடவடிக்கை மேற்கொள்வதற்கு வலியுறுத்தப்பட்டது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் பொருட்டு ISO 9001:2015 தரம் பெற்றுக்கொள்ளுதல்.

ISO 9001:2015 சான்றிதழ் பெற்றுக்கொள்ளுதல் வரலாற்றில் நாம் அடைந்த பெறும் வெற்றியாகும். அது கற்பித்தல், கற்ல் மற்றும் மதிப்பிடல் போன்று கல்வி, நிருவாகம் மற்றும் நிதி நிருவாகம் உள்ளடக்கிய கல்வி துறையின் மேம்படுத்தலை ஏற்படுத்துவதற்கு காரணமாகியதால் சான்றுப்படுத்தலுக்கு ஏதுவாக அமைந்த செயற்பாடு மிகவும்

பயனுள்ளதாகியது. ISO 9001:2015 அடிப்படையிலான தர முகாமைத்துவ முறைமை (QMS) தற்போது QMS மூலம் உள்ளடங்குகின்ற படியால், பாடவிதானம் மேம்படுத்தலுடன் மீண்டும் சான்றுப்படுத்தல் செயற்பாட்டுக்கு உட்பட்டு வருகின்றது.



பதவியணி மற்றும் மாணவர்களுக்கான மேம்படுத்திய வசதிகள்

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கட்டிடங்களின் கருத்திட்டம் கட்டம் II : முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கட்டிடங்கள் தொகுதியில் கட்டம் II நிருமாணிப்பதற்கு கருத்திட்ட பிரேரணையாக 2012 யூன் மாதம் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. மொத்த கருத்திட்டங்களின் செலவினம் ரூபா. மில்லியன் 240 ஆகும். கருத்திட்டத்தின் நிருமாணிப்பு நடவடிக்கைகள் 2019 செப்தெம்பர் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், நிறுவனத்தால் உழைத்துக்கொள்ளப்படும் நிதியை முழுமையாக கட்டிடங்களின் கருத்திட்டம் முடிவுறுத்துவதற்காக பயன்படுத்தப்படுகிறது. கட்டிடம் முடிவுறுத்திய பின்னர், நிறுவனத்தால் மாணவர்களுக்கும் நிறுவனத்தின் சமூகத்திற்கும் விரிவான மற்றும் பரந்தளவில் சேவை வழங்குவதற்கு முடியுமாகும்.

நூலக வசதிகளின் அபிவிருத்தி

உதவி நூலகரின் வழிகாட்டுதலின் கீழ் மூன்று நூலக உதவியாளர்கள் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் பேராசிரியர் உதித லியனகே ஞாபகார்த்த நூலகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

கற்கை பங்காளர்களுக்கு மற்றும் வளப்பகிர்வாளர்களுக்கு தகவல்களின் பொருட்டு கூடுதலான அணுகலை வழங்கி நூலகம்மூலம் பரிசீலனை செய்பவர்களுக்கு வழங்கும் வசதிகள் அதாவது, அச்சீட்டு நூல்களின் பொருட்டு அணுகுதல், இலத்திரனியல் நூல்களின் சேகரிப்பு, சஞ்சிகைகளின் சேகரிப்பு, வார சஞ்சிகை மற்றும் பத்திரிக்கை சேகரிப்பு என்பன ஆண்டு முழுவதும் இற்றைப்படுத்தப்பட்டது. அதேபோன்று நூலகத்தின் பதவியணி பொருட்டு பரிசீலனை செய்பவர்களுக்கு மின்அஞ்சல் மற்றும் தொலைபேசி உரையாடல்கள் ஊடாக தொலைதூர வசதிகளை வழங்கி இணைய தரவுகள் மற்றும் இலத்திரனியல் சேகரிப்புகளை அணுகுவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

நூலகத்தின் வெளியீடாகவும் நிறுவனத்தின் பத்திரிக்கையானதுமான "Wisdom Window" மாதாந்த அடிப்படையில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டது. அதற்காக https://wisdomwindow.pim.sjp.ac.lk/ ஊடாக அணுகலாம்.

ஆண்டில் 85 நூல்கள் ரூபா. 406, 819.68 ஐ செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்ததுடன், ஆண்டில் புதிய இலத்திரனியல் நூல்கள் - நான்கு தரவு தொகுதிகளின் பொருட்டு அணுகல் வசதி வழங்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக EBSCOhost மற்றும் Emerald ஆகிய முழுமையான சஞ்சிகைகளுக்காக இரண்டு தரவு தொகுதிகளை அணுகுவதற்கு பீடத்திடமும் கற்கை பங்காளர்களிடமும் வழங்கப்பட்டிருந்தது.

பத்து பத்திரிக்கைகளைக்கொண்ட நாளாந்த சஞ்சிகை தொகுதியும் நூலகத்தால் பராமரிக்கப்பட்டது.

2021ஆண்டு இறுதியில் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நூலகத்தில் 9771 நூல்களும், 20 வார சஞ்சிகைகளும், 02 ஜர்னல் தரவுகளும், இலத்திரனியல் நூல்களின் சேகரிப்பும் கொண்டமைந்திருந்தது. . "Sri Lankan Journal of Management (SLJM)" இல் 277 கடிதங்களும், 47 பீட வெளியீடுகளும், 414 மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகளும் என்ற வகையில் உள்ளடக்கிய அறிவுசார் வங்கியில் (Institutional repository) மொத்த உள்ளடக்குதலின் எண்ணிக்கை 738 ஆகும்.

EBSCOhost என்பது முதற்தர அறிவார்ந்த ஆராய்ச்சி தரவுத்தளமாகும். பெரம்பாலும் முழுமையான உரை நூல்கள், சகமதிப்பாய்வு சஞ்சிகைகளின் மீது கவனம் செலுத்தப்படுகிறது. நிறுவனத்தால் வெளியிடப்படுகின்ற "Sri Lankan Journal of Management (SLJM)" இல் உள்ளடக்கப்பட்டு, தற்போது EBSCOhost - Business Source Corporate Plus ஹூ Business Source Ultimate வேறுபட்ட இரண்டு தரவுத்தளங்கள் ஊடாக அணுகலாம். SLJM, EBSCOhost தரவுத்தளத்தில் வெளியிடப்பட்ட முதல் இலங்கை சஞ்சிகையாகும். இது உண்மையாகவே, SLJM கடிதங்களில் மேற்கோள் காட்டும் விகிதாசாரம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அது நிறுவனத்தின் தரத்தினை மேம்படுத்துவதற்கு உதவுகின்றது.

தகவல் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்தல்



முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தகவல்கள் தொழில்நுட்ப நிலையம், பட்டப்பின் படிப்பு மாணவர்கள், பதவியணிக்காக தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குகின்றது. மேலும் நிறுவனம் முழுவதும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள், இணையத்தளம் மற்றும் மின் அஞ்சல் வசதிகள், சேவைபெறுநர் நிருவாகம், இலத்திரனியல் சேவைகள் மற்றும் உள்ளீடுகளின் அபிவிருத்தி மட்டுமல்ல பராமரிப்பு போன்றன முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முக்கியமான பணிகளாகும். முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில், தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் சிரேட்ட முகாமையாளராக திரு. சிசிர அத்துரலியகே தலைமைத்துவம் வழங்கியதுடன், திரு. பிரபாஷ் விக்கிரமசிங்க முறைமை பகுப்பாய்வாளராகவும், திரு. சவன் முல்லேகம தகவல் தொழில்நுட்ப அலுவலராகவும் பங்களிப்புச் செய்தனர்

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப நிலையம் மூலம் வழங்கப்படுகின்ற பிரதான சேவைகள் பின்வருமாறாகும்.:

- நிறுவனத்தின் மின்னஞ்சல் சேவையினை முகாமைத்துவம் செய்தல்
- இணையத்தள வசதிகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் வழங்குதல்
- நிறுவனத்தின் இணையத் தள அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு
- முகாமைத்துவ தகவல் முறைமை திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செய்தல்
- “Local Area Networks” திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்
- Wi-Fi வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு
- தகவல் தொடர்பாடல் உபகரணங்களில் குறைப்பாடுகளை தீர்க்கப்படுதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- மொன்பொருள் தாபித்தல் மற்றும் பாதுகாப்பு மென்பொருள் வழங்குதல்
- விவரக் குறிப்புகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடுகளை தயாரித்தல்
- நிறுவனத்தின் பதவியணிக்காக விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தல்.
- பதவியணிக்கு அவர்களின் தகவல் தொழில்நுட்ப தேவைகளின்போது ஒத்துழைப்பு வழங்குதல்
- மாணவர்களின் பொருட்டு ஆலோசனை சேவைகள் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு வழங்குதல்

நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப நிலையத்தால் அபிவிருத்தி செய்து பராமடரிக்கப்படுகின்ற தகவல் முறைமைகள் பின்வருமாறாகும்.

1. கல்வி முன்னேற்ற தகவல் முறைமை
2. பரீட்சை முகாமைத்துவ முறைமை
3. இயங்கலை பிரவேச முறைமை (apply.pim.sjp.ac.lk)
4. இயங்கலை செலுத்தல் முறைமை (payments.pim.sjp.ac.lk)
5. நூலக தகவல் முறைமை
6. மனிதவளங்களின் தகவல் முறைமை
7. வளங்கள் முகாமைத்துவ முறைமை
8. டிஜிரல் சமிக்ஞை முறைமை

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப நிலையத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட மற்றும் பராமரிக்கப்பட்ட இணையத்தளங்கள் பின்வருமாறாகும்.

1. முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் இணையத்தளம் (pim.sjp.ac.lk)
2. ப்ரக்ஞா - முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கற்கை Portal (prajna.pim.sjp.ac.lk)
3. தரச் சான்றுப்படுத்தல் மற்றும் அங்கீகரிப்புக்கான நிலையம் (CQAA) (cqaa.pim.sjp.ac.lk)
4. ஆராய்ச்சி நிலையம் (research.pim.sjp.ac.lk)
5. நூலகம் (library.pim.sjp.ac.lk)

6. தகவல் தொழில்நுட்ப நிலையம் (itc.pim.sjp.ac.lk)
7. Welfare Society நலனோம்பல் சங்கம் (welfare.pim.sjp.ac.lk)
8. வெளியீட்டு நிலையம் (publications.pim.sjp.ac.lk)
9. இலத்திரனியல் களஞ்சியம் (e-Repository) (http://dr.lib.sjp.ac.lk/handle/123456789/9439)
10. "Genesis"- முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் வியாபார இன்கியுபேடர் (genesis.pim.sjp.ac.lk)
11. ஆலோக்க - முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ப்ளொக் இணையத்தளம் (blog.pim.sjp.ac.lk)
12. "Sri Lankan Journal of Management" (sljm.pim.sjp.ac.lk)
13. "Professional Manager" (profmanager.pim.sjp.ac.lk)

"Wisdom Window" (wisdomwindow.pim.sjp.ac.lk

- மற்றும் சர்வதேச வியாபாரம்

விளம்பரமும் புகழுருவும்

பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி ஊடாக 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் செயற்பாடுகளையும் விளம்பரப்படுத்துவதற்கு உற்சாகமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த வகையில் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் நோக்கை அதிகரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முறையாக இற்றைப்படுத்துகின்ற மு.ப.நி இணையதளம் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட விசேட நிகழ்வுகளையும் உள்ளடக்கி இருக்கின்றது

பதவியினர் பயிற்சி

